Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-1037)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 18 (20.06.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 260

## நல்லூர் புலிகள் அலுவலகம் மீது நேற்றிரவு கிரனேட் வீசப்பட்டது!



சம்பவ இடத்திற்கு வந்த கண்காணிப்புக்குழு மற்றும் பொலிஸாருடன் புலிகள். உள்ளே - வீசப்பட்டு வெடிக்காத நிலையிலிருந்த கிரனேட்.

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் நல்லூர் அரசியற்துறை கோட்டச் செயலகம் மீது நேற்றிரவு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

நேற்றிரவு 7.40 மணியளவில், வைமன் வீதியில் அமைந்துள்ள அரசியற்துறை கோட்டச்செயலகம் மீதே கைக்குண்டு வீசப்பட்டது.

இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், மோட்டார் சைக்கிளில் சென்றவாறே, கைக்குண்டை வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அலுவலகத்தின் வாசலில் வீழ்ந்த இந்தக் கைக்குண்டு வெடிக்காததால், சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக யுத்த (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணிலின் பேச்சில் புதிதாக ஒன்றுமே இல்லை!

## வாய்ப்பேச்சு வேண்டாம் வரைபைத் தரட்டும் அன்ரன் பாலசிங்கம் சுடச்சுடப் பதிலளிப்பு

(லண்டன்)

**அரசாங்கம் எப்போது - இடைக்கால நிர்வாகம் பற்றிய நடைமுறைச் சாத்தியமான வரைபை எமக்கு பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கின்றதோ, அப்போதே நாம் மீண்டும் சமாதானப் பேச்சுக்களுக்கு வருவது பற்றிக் கவனிக்கலாம். பிரதமர் ரணிலின் நேற்றைய பேச்சில் புதிதாக ஒன்றுமில்லை. எந்த விளக்கமுமில்லாத, மனக்கண்ணால் தெரிகின்ற கட்டமைப்புப் பற்றியே அவர் பேசுகிறார் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

பிரதமர் ரணிலின் நாட்டு மக்களுக்கான தொலைக்காட்சி உரைக்குப் பதிலளித்து, பாலசிங்கம் இப்படிக் கூறியிருக்கிறார்..

இது தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவிக்கும் போது,

பிரதமர் ரணிலின் நாட்டு மக்களுக்கான நேற்றைய உரை - ரோக்கியோவில் அவர் பேசியதைத் திரும்பக் கூறியதாகவே அமைந்திருக்கிறது. நாம் முன்னமே கூறியபடி- இந்த உரைகளை வைத்துக் கொண்டு, நாம் சமாதானப் பேச்சுக்களுக்கு வரமுடியாது என்பதே எமது கருத்தாகும்.

எம்மிடம் இடைக்கால நிர்வாகம் தொடர்பான நடைமுறைச் சாத்தியமான வரைபை அரசாங்கம் முன்வைக்குமாக இருந்தால் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பல் மூழ்கிய இடத்தில் கடற் கண்காணிப்பாளர் தேடுதல் நேற்றுமுன்தினம் இரவுடன் முடிவு!

(கொழும்பு)

கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக- குறிப்பிட்ட இடத்தை நேரில் சென்று அவதானிப்பதற்காகச் சென்ற, கடற் கண்காணிப்பாளர்கள், நேற்றுமுன்தினம் நள்ளிரவு தேடுதல்களை முடித்துக்கொண்டு, திருகோணமலைக்குத் திரும்பியதாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.

புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முழுமையாக ஆராய்ந்து முடிக்கும்வரை இது தொடர்பான எந்தக் கருத்தையும் கண்காணிப்புக்குழு வெளியிடாது.

இப்போது, கடற்படையின் 'நந்தி (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் வழங்கத் தயார் புலிகள் பேசுவதற்கு முன்வரவேண்டும்

### தொலைக்காட்சி உரையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

ஐ.தே.மு. அரசாங்கத்தைக் கவிழ்த்து புதிய அரசாங்கமொன்றை உருவாக்கலாம் என்ற எதிர்க்கட்சிகளின் கனவு நனவாகாது என்று- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிதுள்ளார். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை தொடர வேண்டிய அவசியம் குறித்தும் அவர் கூறியுள்ளர்.

நாட்டு மக்களுக்கு தொலைக் காட்சியில் நேரடியாக உரையாற்றியபோதே, இதனை அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒஸ்லோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள், ரோக்கியோவில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொள்ளாதமை கவலைக்குரியது.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா புலிகளுக்கு கடிதம்; கொழும்பில் பரபரப்புச் செய்தி!

(கொழும்பு)

ஜனாதிபதியிடமிருந்து விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் நேற்று பரபரப்பான செய்தி எழுந்தது.

வட-கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகத்திற்கு தனது ஆதரவை வழங்கவிருப்பதாக, ஜனாதிபதி இக்கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும், அத்துடன் தன்னைக் குறிவைத்து நடாத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களை, பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்குத் தான் தயாராகவிருப்பதாக ஜனாதிபதி தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

எனினும்- இக்கடிதம் குறித்து ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### விண்ணாணம் விநாசியர்



பழங்கஞ்சியத்தான் புதுப் பாயாசமெண்டு பரிமார்றார் ஐயா...

## பொங்கு தமிழ் எழுச்சி விழாவுக்கு தயாராகிறது யாழ்.குடாநாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும்- 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்காக, யாழ்.குடாநாடு தயாராகி வருகிறது.

குடாநாடு தழுவிய வகையில் மேற்படி எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக- நூற்றுக்கணக்கான யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, பொது மக்களுக்கு மேற்படி எழுச்சி நிகழ்வு தொடர்பாக விளக்கமளித்து வருகின்றனர்.

இதன் மூலம்- இந்த நிகழ்வு குறித்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் - 'பொங்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## முழுமையான அதிகாரம் கொண்ட நிர்வாகமே புலிகள் எதிர்பார்ப்பது!

### ரணிலுக்கு நோர்வே தூதுவர் வலியுறுத்து

வட-கிழக்கில் முழுமையான நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட உறுதியான நிர்வாகக் கட்டமைப்பையே விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர்- இவ்வாறு, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் - வன்னி சென்று, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் நோர்வேத் தூதுவர் பேச்சு நடத்தியிருந்தார்.

இப்பேச்சுவார்த்தையின் விபரங்கள் குறித்து, நேற்று - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நோர்வேத் தூதுவர் எடுத்து விளக்கினார்.

நேற்றுக்காலை பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது - இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்புக்கள் குறித்து நோர்வேத் தூதுவரால் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் - வட-கிழக்கில் இதுவரை காலமும் அரசு எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளவில்லை என்ற புலிகளின் அதிருப்தியையும் நோர்வேத் தூதுவர் பிரதமரிடம் எடுத்துக் கூறினார்.

இதேவேளை - மீண்டும், தூதுவர் விரைவில் வன்னி செல்லவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## தமிழ்ச் சிறுவன் கஜன் கோல்வ் உலக சாம்பியன்!

### 'கனடாவின் சின்னப் புலி' சாகசம்



கனடாவில் வாழும் இலங்கைத் தமிழ்ச் சிறுவனான கஜன் சிவபாலசிங்கம், அமெரிக்காவில் நடைபெற்ற உலகளவிலான 'கோல்வ்' போட்டியில் சிறுவர் பிரிவில் சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றுள்ளான்.

'கனடாவின் சின்னப் புலி' (**Canada's Little Tiger**) என அழைக்கப்படும் இந்தச் சிறுவனுக்கு வயது ஒன்பதே ஆகும்.

'கோல்வ்' விளையாட்டில் உலகின் முதல்தர வீரரான ரைகர் வூட்ஸ்ஸின் வாரிசாக- விளையாட்டு வல்லுநர்களால் (10 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தமே தீர்வென அரசு நினைத்தால் தமிழர் பலத்தை உலகறியச் செய்வோம்!

## பிரபாவுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு மக்கள் அறிக்கை

விடுதலைப் புலிகள் பலமாக இருந்ததனாலேயே பேச்சுவார்த்தைக்கு அரசு இறங்கி வந்தது. விடுதலைப் புலிகளின் பலம் இழக்கப்பட்டால், தமிழர்களுக்கு விமோசனமே இல்லை. எனவே, முல்லைத்தீவுச் சம்பவமே இறுதிச் சம்பவமாக இருக்கட்டும். யுத்தம் மூலமே தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண முடியுமென அரசாங்கம் உண்மையிலேயே நினைக்குமானால், விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபட்டு தமது பலத்தையும், தமிழர் பலத்தையும் உலகறியச் செய்ய வேண்டும். எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அத்தகைய முடிவை எடுப்பாரானால், எமது மக்கள் தமது முழு ஆதரவையும் தரத் தயாராகவே உள்ளனர் என்று, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 16 மாதங்கள் கடந்து விட்ட நிலையில்- தமிழ் மக்களுக்கும், தமிழ் மக்களின் காவலர்களான விடுதலைப் புலிகளுக்கும், எதிரான கெடுபிடிப் போக்கினை அரசும் அரச படைகளும் தொடர்ந்துவருகின்றன. இதன் உச்சகட்டமாக, கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு அப்பால், சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் ஒன்று இலங்கை கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டதுடன், அதில் பயணம் செய்த போராளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய இச்சம்பவம், அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். இதற்கு காரணமானவர்கள் யார் என்பதைக் கூட அறிய முடியாத நிலையில் அரசு திணறுவதைக் காணமுடிகின்றது.

தமிழர்களின் பலமும், பாதுகாப்பும் விடுதலைப் புலிகள் மட்டுமே. விடுதலைப் புலிகள் பலமாக இருந்த வேளையிலேயே போர்நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களுக்கு வந்தனர். யுத்தச் சூழலில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களைக் கருத்திற் கொண்டே, விடுதலைப் புலிகள் இந்த முடிவுகளை எடுத்தனர்.

ஆனால்- போர் நிறுத்தத்தின் பின்னர் பொதுமக்கள் கொல்லப்பட்ட போதிலும், போராளிகளை இழக்கவேண்டி வந்தபோதிலும், போராளிகள் அவமானப்படுத்தப்பட்ட போதிலும் புலிகள் தொடர்ந்து பொறுமை காத்துவந்தனர். ஆனால், விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் நடவடிக்கைகளும் அவர்களின் பலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன. பிரித்தாளும் தந்திரத்தைப் பாவித்து தமது நோக்கங்களை நிறைவேற்றலாமென அரசோ ஏனைய சக்திகளோ நினைத்தால், அதற்கு விடுதலைப் புலிகள் என்றுமே அனுமதிக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த வேண்டுகோள்.

எனவே, தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களின் காவலர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை அரசு உடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மூதாளர் பேணலகத்திற்கு சுவிஸ் இளைஞர் உதவி

(ஆழியவளை)

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்தற்கு - சுவிஸ் வாழ் தமிழ் இளைஞர மன்றம், 10 லட்சம் ரூபாயை வழங்கவுள்ளதாக, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. இதற்கான நிதியில், 3 இலட்சம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், சமுதாய முன்னேற்ற நிலையத்தால் நடாத்தப்படும் இந்த நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு, கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், மங்கள விளக்கினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார். சுவிஸ் நாட்டுத தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சந்திரன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். (122)





நேற்று, யாழ்.நகரில் திறந்து வைக்கப்பட்ட டி.எச்.எல் கூரியர் சேவையின் திறப்பு விழாவிற்கு- டி.எச்.எல் யாழ்ப்பாண முகவர் நிலையத்தின் பணிப்பாளர் விசாகரட்ணம், இலங்கைக்கான டி.எச்.எல் நிறுவனத்தின் முகாமையாளர் ஷாமிந்த ஹேவா மல்லிக, ஜோன்கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் றொமேஷ் டேவிட் ஆகியோர் முன்வரிசையில் நடந்து வருவதனையும், டி.எச்.எல் நிறுவனத்தின் தேசிய சேவைகளுக்கான முகாமையாளர் துஷான் குணரட்ன, டி.எச்.எல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் உதயஷங்கர், 'மக்கனன் ரவல்ஸ்' பயண முகவரகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ரவோ ராஜரட்ணம் ஆகியோர் பின்வரிசையில் நடந்து வருவதனையும் முதலாவது படத்திலும் - ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் றொமேஷ் டேவிட் நாடாவை வெட்டி கூரியர் நிலையத்தைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஞானாசாரியார் கல்லூரிக்கு தொலைபேசி, பாண்ட் வசதிகள்!

(ஆழியவளை)

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளை, இப்பாடசாலைக்கு தொலைபேசி வசதியைப் பெற்றுக் கொடுத்ததுடன், பாண்ட் வாத்தியக் கருவியையும் வழங்கவுள்ளது.

மேற்படி பாடசாலையின் தாய்ச் சங்கத்தினால், லண்டன் கிளையின் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழுவினருக்கு, கடந்த வெள்ளிக்கிழமை வரவேற்பளிக்கப்பட்டது.

வி.அருளாந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்- லண்டன் கிளையைச்சேர்ந்த க.நடராஜா, பாண்ட் வாத்தியக் கருவிகளையும், ஆ.பாலகிருஷ்ணன் பாடசாலைக்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# சுற்றாடல் தினத்தையொட்டி பளையில் மக்கள் சிரமதானம்

(பளை)

சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு, பளைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பளை வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் இந்தச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

பளை வைத்தியசாலைப் பகுதி மற்றும் தீச்சுவாலை வெற்றிவிழா இடம்பெற்ற முல்லையடி ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பொலித்தீன் பைகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டு, துப்பரவு செய்யப்பட்டது.

### வருடந்தோறும்

# குப்பி விளக்கு விபத்துக்களால் பத்தாயிரம் பேர் காயமடைகிறார்கள்

(கொழும்பு)

பாதுகாப்பற்ற குப்பி விளக்குகளைப் பயன்படுத்துவதால்- வருடந்தோறும் பத்தாயிரம் பேர் காயமடைவதாகவும், அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக 15 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட வேண்டியிருப்பதாகவும் திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் மக்களில்- 50 வீதமானவர்களுக்கு, இதுவரை மின்சார வசதி கிடைக்கவில்லை. இதனாலேயே குப்பி விளக்குகளைப் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்.

குப்பி விளக்கு விபத்துக்களால் நூற்றுக்கு மேற்பட்டோர் வருடந்தோறும உயிரிழக்கின்றனர். இதனால்- பாதுகாப்பான குப்பி விளக்குகளை வழங்கத் தேவையான நிதியை மாகாண சபைகள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்குவதற்கு, திறைசேரி நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (01)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த
சொக்கத் தங்கம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே) (சி.974)
BEHIND ENEMY LINE

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
கே.எஸ்.ரவிக்குமாரின்
பாறை
10.30, 2.30, 6.30, 9.30 (சி.973)

### சிறு விளம்பரம்

#### தவறிவிட்டது

சாமித்தம்பி பத்மநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. (இல.632 232721ஏ) கண்டெடுத்தவர்கள் நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (சி/1095)

# தெல்லிப்பளைக் கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள்!

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற, தமிழ்த்தினப போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**பிரிவு 1**

**வாசிப்பு:-** மா.நாகவதனி (தந்தை செல்வா தொ.நி.பள்ளி), கு.சகானா (மகாஜனா கல்லூரி), சி. ஜெயகௌரி (வசாவிளான் ம.வி.)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு - கதை கூறல்:-** இ.கிருஷ்ணா (மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்),ந. ரவிசங்கரன் (தந்தை செல்வா தொ. நி. பள்ளி), மோ.சோதீபன் (மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்)

**எழுத்து ஆக்கம்:-** சி.சுகன்ஜா ( மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்), சி.ருகல்ஜா (தந்தை செல்வா தொ. நி.பள்ளி), பு.புஸ்பதாரணி (மயிலிட்டி றோ.க.வித்தியாலயம்)

**குறுநடன ஆக்கம்:-** இ.சதீஸ்கரன் (வீமன்காமம் ம.வி).

**பேச்சு:-** க.சுபாங்கி (மகாஜனாக் கல்லூரி), கே.ராகவி (தந்தை செல்வா தொ.நி.பள்ளி), பா.புஸ்பகாந்தன் (மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்)

**பாவோதல்:-** அ.றதீபனா (மகாஜனாக் கல்லூரி), ஜெ.தேவரூபி (மல்லாகம் கனிஷ்ட வித்தி.), சீ.கீர்த்திகா (அளவெட்டி அ.மி.த.க).

**இசையும் அசைவும்:-** தா.திவாகரன் (தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்), சி.கார்த்திகா (அளவெட்டி அருணோதயா), இ.சுகர்ணியா (தந்தை செல்வா தொ.நி.ப).

**தனி நடனம்:-** கு.பிரிஜா (மல்லாகம் கனிஷ்ட வித்தி.), கே.வர்சினி (மகாஜனா கல்லூரி), நி.யசோநிதி (தெல்லிப்பளை சைவப்பிரகாசா).

**பிரிவு - 2**

**வாசிப்பு:-** வ.திருமாறன் (மகாஜனா கல்லூரி), து.வக்சனா (தெல்லிபபளை சைவப்பிரகாச), ச.கிளியோப்பற்றா (குட்டியப்புலம் அ.த.க)

**கட்டுரை, கடிதம் எழுதுதல் :-** க.கபீர்த்தனா (யூனியன் கல்லூரி), மோ.கார்த்திகா (மகாஜனா கல்லூரி), சி.சோபனா (வசாவிளான் ம.வி).

**பேச்சு:-** கு.திருமாறன் (மகாஜனா கல்லூரி), ப.டிலானி (யூனியன் கல்லூரி), தி.கயூனா (வசாவிளான் மத்திய ம.வி.)

**பாவோதல்:-** சு.தசாங்கன் (யூனியன் கல்லூரி), சி.ரோபிதா (மகாஜனா கல்லூரி), சு.ஜான்சியா (வசாவிளான் ம.ம.வி.)

**தனி இசை:-** சி.பிரபூர்ணா (யூனியன் கல்லூரி), நி.துவாரகா (அருணோதயா கல்லூரி), தி.ரஞ்சித்குமார் (மயிலிட்டி வடக்கு கலைமகள்).

**தனி நடனம்:-** கு.சிந்துஜா (மல்லாகம் ம.வி.)

**பிரிவு - 3**

**கட்டுரை, கடிதம் எழுதுதல்:-** கை.அனுஜா (யூனியன் கல்லூரி), பா.பவிதா (மகாஜனா கல்லூரி), த. நிருஜா (மல்லாகம் ம.வி.)

**பேச்சு:-** த.தமிழினி (யூனியன் கல்லூரி), ந.சுகாயினி (மகாஜனா கல்லூரி), இ.ராஜ்பிரியா (கீரிமலை நகுலேஸ்வரா கல்லூரி)

**பாவோதல்:-** சி.கேசலா (யூனியன் கல்லூரி), க.பாலகாந்தன் (மகாஜனா கல்லூரி), இ.கவிதா (அளவெட்டி அருணாசலம் ம.வி.)

**தனி இசை:-** பா.கர்மிலா (அளவெட்டி அருணோதயா கல்லூரி), சு. நிரோஜா (வசாவிளான் ம.வி.), ர.நிஷாந்தினி (மல்லாகம் ம.வி.)

**தனி நடனம்:-** நி.சுமித்தா (மகாஜனா கல்லூரி), சி.சரண்ஜா (வசாவிளான் ம.வி), வ.பாரதி (யூனியன் கல்லூரி)

**பிரிவு - 4**

**கவிதையாக்கம்:-** வை.வாமணன் (மகாஜனா கல்லூரி), அ.கார்த்திகா (யூனியன் கல்லூரி), யோ.ஜெகந்தன் (வசாவிளான் ம.வி.)

**சிறுகதையாக்கம்:-** வா.தர்மிஷா (யூனியன் கல்லூரி), பூ.கேதீஸ்வரி (வீமன்காமம் ம.வி.), இ.மதனி (குட்டியப்புலம் அ.த.க.பா)

**பேச்சு:-** ஆ.அனுசியா (மகாஜனா கல்லூரி), யோ.சுதாகரன் (யூனியன் கல்லூரி), செ.செந்தூரன் (குட்டியப்புலம் அ.த.க.பா)

**பாவோதல்:-** பே.புஸ்பனா (மகாஜனா கல்லூரி), க.திவ்ஜா (வசாவிளான் ம.வி.), இ.சாளினி (அளவெட்டி அருணோதயா கல்லூரி)

**தனிஇசை:-** இ.ஜீவிகா (யூனியன் கல்லூரி), அ.திபாகரன் (மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்.), நி.பாஸ்கரன் (அருணோதய கல்லூரி)

**தனிநடனம்:-** சோ.அனுஜா (வசாவிளான் ம.வி), யோ.கேசிகா (யூனியன் கல்லூரி), க.சுகன்ஜா (மகாஜனா கல்லூரி)

**கட்டுரை வரைதல், கவிதை நயதல்:-** க.சிந்திகா (யூனியன் கல்லூரி), ர.பிரியதர்சன் (மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.), தேரஜிதா (கீரிமலை நகுலேஸ்வரா)

**பிரிவு - 5**

**தமிழியற் கட்டுரை வரைதல், திறனாய்வு செய்தல், இலக்கியச் சொற்பொழிவாற்றல்:-** தி.காயத்திரி (மகாஜனா கல்லூரி), தி.ஜாமினி (யூனியன் கல்லூரி), இ.கபிலன் (அளவெட்டி அருணோதயா)

**சிறுகதையாக்கம்:-** ஏ.அனுஷாந்தி (யூனியன் கல்லூரி), செ.கமலினி (இளவாலை மெய்கண்டான்)

**பேச்சு:-** இ.இரஜிகன் (அருணோதய கல்லூரி), ம.சுதர்சன் (வசாவிளான் ம.வி), இ.ரோகினி (மகாஜனா கல்லூரி)

**பாவோதல்:-** க.சர்மினி (அளவெட்டி அருணோதயா), பா.கலைவாணி (வசாவிளான் ம.வி.), சி.பிரதீபா (யூனியன் கல்லூரி)

**தனிஇசை:-** மோ.மஜிதா (வசாவிளான் ம.வி.), இ.பிரபு (யூனியன் கல்லூரி), த.சோபிதா (மகாஜனா கல்லூரி)

**தனி நடனம்:-** சி.சிவரஞ்சினி (வசாவிளான் ம.ம.வி.), க.மதனிகா (யூனியன் கல்லூரி), த.அனோமிலா (மல்லாகம் ம.வி.)

**இசைக்குழு 1 - முதலாம் இடம்:-** யூனியன் கல்லூரி.

**இசைக்குழு 2 - முதலாம் இடம்:-** யூனியன் கல்லூரி.

**வில்லுப்பாட்டு:-** வசாவிளான் மத்திய ம.வி.

**விவாதம்:-** அளவெட்டி அருணோதயா கல்லூரி.

**தமிழறிவு:-** மகாஜனா கல்லூரி.

**குழு நடனம் , நாடகப் போட்டி:-** மல்லாகம் ம.வி.

**நாட்டுக்கூத்து, இசைநாடகப் போட்டி:-** அளவெட்டி அருணோதயா கல்லூரி.

**விசேட கூத்துப்போட்டி:-** மல்லாகம் ம.வி.

# 45 இலங்கையர்கள் அபுதாபியில் கைது!

அபுதாபியில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 49 இலங்கையர்களை- அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்திருப்பதாக, வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விஸா முடிந்ததும் வெளியேறாமல் - சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை வெளியேறுவதற்கு அபுதாபி அரசாங்கம் காலக்கெடு விதித்திருந்தது. ஏப்ரல் மாதத்திற்கு முன்னர், சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை தமது நாட்டிலிருந்து வெளியேறுமாறு, அபுதாபி அரசு கேட்டிருந்தது.

பின்னர், மேலும் ஒருமாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இந்தக் காலக்கெடு முடிவடைந்ததையடுத்து, அபுதாபிப் பொலிஸார் சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரைக் கண்டுபிடித்துக் கைதுசெய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

வீடுவீடாகச் சென்று - தேடுதல் நடத்திவரும் அபுதாபிப் பொலிஸார், 49 இலங்கையர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களில் - 42 பேர் பெண்கள் என்றும், அவர்கள் பணிப்பெண்களாக வேலைசெய்து வந்தவர்கள் என்றும், அபுதாபி பொலிஸார் தெரிவித்தனர்.

# எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பாதுகாக்க உள்துறை அமைச்சைப் பொறுப்பெடுங்கள்!

## சந்திரிகாவுக்கு ஜே.வி.பி. கோரிக்கை

எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டுமானால், உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து ஜோன் அமரதுங்கவை நீக்கிவிட்டு, அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்கவேண்டும் என- ஜே.வி.பியின் மேல்மாகாணசபை உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க கேட்டுள்ளார். மேல்மாகாணசபை பொ.ஐ.மு.உறுப்பினர், சுனில் மென்டிஸ். கொலை செய்யப்பட்டதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் -

தொடர்ச்சியாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இந்தக் கொலைகளைத் தடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமோ அல்லது உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடமோ, கோரிக்கை விடுத்து எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்படுவதற்கு, ஐ.தே.க அரசாங்கத்திற்கும் தொடர்புகள் இருக்கின்றன.

இதனால், உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் இருந்து,



உள்துறை அமைச்சை ஜனாதிபதி உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். இதன்மூலமே, எஞ்சியுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவர்களை

# ஜே.வி.பி. சார்பு மாணவர்அமைப்புகள் தவறாக வழிநடத்த முனைகின்றன

## அமைச்சர் கபீர் காசிம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பி சார்பு மாணவர் அமைப்புக்கள் சில, பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு - பல்கலைக்கழக மாணவர்களைத் தவறாக வழிநடத்த எத்தனிப்பதாக, மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் குறைத்துவருவதாக, சில மாணவர் அமைப்புக்கள் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கபீர் காசிம் -

பல்கலைக்கழகக் கல்விக்கு புத்துயிர் அளிக்க, அரசாங்கம் 400 கோடிரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் அரசாங்கம், இந்தவருடம் மேலதிகமாக 67 கோடி ரூபாவை பல்கலைக்கழகக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது.

ஆனால் சில மாணவர் அமைப்புக்கள் - குறிப்பாக ஜே.வி.பி சார்பு அமைப்புக்கள், பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு விட்டதாக, இவர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்களை கவனத்தில் எடுத்து, மாணவர்கள் தவறான வழியில் செல்ல வேண்டாம். இது அரசாங்கத்திற்கு எதிராக செய்கின்ற அரசியல் சதி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




தமது அமைப்பின் தியாகிகள் தினத்தை முன்னிட்டு, ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் அணியினர் நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தபோது எடுத்த படம்.

# சந்திரிகாவின் உறவினர் மின் ஒழுக்கில் சிக்கிப் பலி!

ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றிய - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமான ஒருவர், மின் ஒழுக்கினால் மரணமானார்.

ஜனாதிபதி மாளிகையின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான, ரவி திவிதொட்டவே (வயது 41), என்பவரே மரணமானவராவார். இவர் கடந்த ஒன்பது வருடங்களாக, ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றிவருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் மைத்துனர் முறையான கேணல் திவிதொட்டவேயின் மகனான இவர் - கொழும்பு, கண்டி, நுவரெலிய ஆகிய இடங்களிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்துவந்தார்.

அத்துடன் - ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தியோகபூர்வ விஜயங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இவரே பொறுப்பாக இருந்தார்.

தனது வீட்டுக்கு அருகிலுள்ள அருவியொன்றிலிருந்து நீர் மாதிரியை எடுக்கமுற்பட்டபோது, காட்டு விலங்குகளுக்காக அமைக்கப்பட்ட மின்சார வேலி மூலம் ஏற்பட்ட மின்ஒழுக்கினால் பாதிக்கப்பட்டு மரணமானார்.

# பொதிகளுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முயன்ற மூன்று எம்.பிக்கள்!

## விசாரணைக்கு கோருகிறார் அமைச்சர் சமரசிங்க

நாடாளுமன்றத்துக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணிக்குப் பின்னர், மூன்று எம்.பிக்கள் பொதிகளுடன் நுழைய முயன்ற சம்பவம் தொடர்பாக, அமைச்சர் மகிந்த சமரசிங்க, சபாநாயகரிடம் முறையீடு செய்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பொதிகளுடன் மாலை ஆறுமணிக்குப் பின்னர், எதற்காகச் சபைக்குள் நுழைய வேண்டும்.? அவர்களை நாடாளுமன்றப் பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார் சோதனையிட முயன்றபோதும், அவர்கள் அதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

இந்தச் சம்பவம் நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே நாடாளுமன்றத்துக்குள் மல்வளையத்தைக கொண்டுவந்து, சபை நடவடிக்கைகளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநாகரிகப்படுத்தினர்.

இப்போது பொதிகளுடன் மாலை ஆறுமணிக்கு நாடாளுமன்றத்துக்குள் நுழைய முயன்றிருக்கிறார்கள். இது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க, சபாநாயகரிடம் முறையீடு செய்தார்.

# நிற்காது சென்ற லொறி மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு!

## நடத்துனரும், சாரதியும் தப்பியோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில்- குடத்தனை வீதியில் சென்று கொண்டிருந்த லொறியொன்றைப் பொலிஸார் சோதனையிட வழிமறித்தபோது, அது நிற்காமல் செல்லவே பொலிஸார் லொறிமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன்போது- லொறியின் சாரதியும், நடத்துனரும் லொறியை இடையில் விட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் குடத்தனையிலிருந்து லொறி ஒன்று மணற்காடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இந்த லொறியைப் பொலிஸார் தடுத்து நிறுத்திச் சோதனையிட முற்பட்டனர். லொறி நிற்காது தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. பொலிஸார் அதனைத் துரத்திப்பிடிக்க முயற்சித்தனர். எனினும், அது கைகூடாமற்போகவே - லொறியை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதையடுத்து - லொறியை நிறுத்திவிட்டுச் சாரதியும், நடத்துனரும் தப்பி ஓடிவிட்டனர்.

அவர்கள் விட்டுச்சென்ற லொறி, தற்போது நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

## கடன் அடிப்படையில் மீன்பிடி உபகரணங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 'நிகொட்' நிறுவனம் மீனவர்களுக்கு, படகுகளையும், மீன்பிடி வலைகளையும் கடன் அடிப்படையில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, வழங்கவுள்ளது.

இத் திட்டம் - மருதங்கேணிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வரி விலக்குக்கு யோசனை

மாதாந்தம் 75 ஆயிரம் ரூபாவுக்குள் வருமானம் பெறும் வர்த்தகர்களுக்கு, பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான யோசனையை - நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனையை அவர் தெரிவித்தார். இதன்மூலம் விலைவாசி உயர்வை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியக் கடற்படையின் ரோந்து பாக்கு நீரிணையில் அதிகரிப்பு!

பாக்குநீரிணையில், இந்தியக் கடற்படையின் ரோந்து மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளில் இந்தியக் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரோந்துப் பணியில் இந்தியக் கடற்படையின் இரண்டு பெரிய கப்பல்களும், பல அதிநவீன கண்காணிப்புப் படகுகளும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் எண்ணெய்க் கப்பல் ஒன்று தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்துக்கு, இந்தியக் கடற்படை உதவிகளைச் செய்தது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தையடுத்தே பாக்கு நீரிணையில் இந்தியக் கடற்படையின் பாதுகாப்பு தீவிரமாக்கப்பட்டிருப்பதாக, இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வளைகுடாவில் பாதிக்கப்பட்ட மேலும் 2900 பேருக்கு இழப்பீடு!

## விரைவில் வழங்க அரசு நடவடிக்கை

வளைகுடாவில் 1991 இல் இடம்பெற்ற யுத்தநடவடிக்கைகளால்- தொழில்களை இழந்து, இலங்கை திரும்பிய தொழிலாளர்களில் மேலும் ஒரு தொகுதியினருக்கு, விரைவில் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வளைகுடா யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான இழப்பீட்டில் மேலும் ஒரு தொகுதியை, ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது. இதிலிருந்து 2900 பேருக்கான இழப்பீடுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை விரைவில் இதற்கான அமைச்சரவையின் அனுமதி பெறப்படும்.

அமைச்சரவை அனுமதி கிடைத்ததும், 2900 பேருக்கு உடடியாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரியவருகிறது.

# தேர்தல் முறையை மாற்ற அரசாங்கம் யோசனை!

## அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

தற்போது அமுலில் உள்ள தேர்தல் முறையை மாற்றியமைக்க, அரசாங்கம் யோசித்து வருவதாக அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

அதிகரித்துவரும் தேர்தல் செலவீனங்கள் மற்றும் தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்தவே தேர்தல் முறையை மாற்றியமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி மீண்டும் இடைத்தேர்தல் முறை அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளதுடன் -

ஜனாதிபதி தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்தவும், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை ஒரேநாளில் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், இனிவரும் காலங்களில் தேர்தல்கள் சனிக்கிழமைகளிலேயே நடத்தப்படும் என்றும், இன்னும் இரண்டு வாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது குறித்து கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்வார் என்றும், அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

# இயல்பு நிலை ஏற்படவில்லை என்பதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவோம்!

## பொங்குதமிழுக்கு பல்கலை மாணவர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் வாழ்விடங்களில், இராணுவத்தினர் தங்கியிருப்பதாலேயே மக்களின் வாழ்வில் இதுவரை இயல்புநிலை ஏற்படவில்லை. இதனாலேயே அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப்பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் - பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக, வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர் தாயகப் பிரதேசத்தில் முகாமிட்டிருக்கும் இராணுவம் - அப்பாவிப் பொதுமக்கள் மீதும், புலிகள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்வதன்மூலம், யுத்தத்திற்கான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது.

இவையெல்லாம் இராணுவம் எமது வாழ்விடங்களில் இருப்பதாலேயே ஏற்படுகின்றது. இதனால், தமிழ் மக்களது வாழ்விடங்களில் இராணுவம் குடிகொண்டிருப்பதனைத் தமிழ்மக்கள் விரும்பவில்லை. ஆனால், இராணுவம் - தமிழ்மக்களின் பாதுகாப்பிற்காகவே யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் - இராணுவம் வெளியேறுவதனை விரும்பவில்லை என்றும் அரசு, சர்வதேச சமூகத்திற்குப் பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது.

சர்வதேச சமூகம் அரசின் கருத்துக்களை நம்பி உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி, மக்கள் குடியிருப்புகளிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, அவர்களின் மீள் குடியமர்வுக்கு வழிசெய்ய வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுக்காது மௌனமாக இருப்பதுடன், அரசுக்கு- நிதி, ஆயுத, தளபாட உதவிகளையும் செய்துவருகிறது. எனினும், சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள இந்நிலையில், சர்வதேச சமூகம் தமிழ்மக்களின் விருப்பங்களை அறியமுற்படுகின்றது. இந்த நிலையில் நாம் அனைவரும் அணிதிரண்டு -

"நாங்கள் எங்கள் வீட்டிற்குச் செல்வதற்காக இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்"

என்று - அரசின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் சர்வதேச சமூகத்திற்கு ஒருமித்த குரலில் வெளிப்படுத்துவோமாயின், சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறமுடியும்.

மீண்டும் துப்பாக்கிகளின்றி, யுத்தமின்றி, ரத்தமின்றி, வன்முறைகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமல் போதல்கள், அவலங்களின்றி- ஒரு உயிரைத்தானும் இழக்காமல், எமது வாழ்விடங்களிலுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி, உரிமைகளை வென்றெடுக்க இதுவே இறுதிச் சந்தர்ப்பம்.

இதற்காக, யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்படும் பொங்குதமிழ் நிகழ்வில் நாம் பல்லாயிரக்கணக்கில் ஒன்றிணைந்து, எதிர்வரும் 27 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் கூடி, எமது விருப்பத்தை வெளிப்படுத்துவோம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### துயிலுமில்லம் சிரமதானம்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ள காணி - சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது.

வடமராட்சி கிழக்கு- அரசியற் பொறுப்பாளர் தீபன் தலைமையில், அப்பகுதிப் பொது அமைப்புகள், சங்கங்கள் இச் சிரமதானப் பணியில் பங்குபற்றி வருகின்றன. (122)

# அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் மீண்டும் கிளிநொச்சியில் திறக்கும்

## அரச அதிபர் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில், மீண்டும் அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரிடம் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசியக் குழுவின் கூட்டத்தில் வைத்து, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

1984 இல் கிளிநொச்சியில் அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் இயங்கி வந்தது. இராணுவ நடவடிக்கைகளால் செயலிழந்த இந்த அலுவலகத்தை, மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

## 5000 மீற்றர் ஓட்டப்போட்டி

# பெண்கள் பிரிவில் மூன்று இடங்களும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டி மற்றும் 5000 மீற்றர் ஓட்டப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

5000 மீற்றர் ஓட்டப் போட்டியில், ஆண்களின் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலகத்தைத் சேர்ந்த, ரி.துஷன் முதலாம் இடத்தையும், தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அன்ரனி ஸ்டீவன் இரண்டாம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த, காந்தரூபன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

5000 மீற்றர் பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த - இ.சிவரஞ்சனி, ந.மேர்சி, ந.கமலராணி ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர்.

# வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



## முதலாவது அகவையில்



பெயர் - ரா.ரிஸ்விதா
முகவரி - 122, ஏ.வி.றோட், அரியாலை.

## இரண்டாவது அகவையில்

பெயர் - ந.விதுர்ஷியா
முகவரி - 10 ம் கட்டை, விஸ்வமடு.



## நான்காவது அகவையில்



பெயர் - ம.டிறோசன்
முகவரி - கர்ராஜ் லேன், சண்டிலிப்பாய்.

## நான்காவது அகவையில்

பெயர் - த.தனஞ்செயன்
முகவரி- வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்.



## ஐந்தாவது அகவையில்

பெயர் - ம.சிவரஞ்சினி
முகவரி - இல:3, செம்மணி வீதி, நல்லூர்.



## ஆறாவது அகவையில்



பெயர் - பு.தர்மிலன்
முகவரி - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

## ஏழாவது அகவையில்

பெயர் - வே.சஜீவன்
முகவரி - இராமநாதன் வீதி, திருநெல்வேலி.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

### வழிபாட்டு மண்டபம், கணினி நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வழிபாட்டு மண்டபத்துக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு வழங்கிய நிதியில் புதிய தளமும், மேடையும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் நாளை சனிக்கிழமை, காலை 10.30 மணிக்கு கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்துவைக்கப்படும். அத்துடன் சங்கத்தின் தங்கம்மா மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினி நிலையத்தினை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிக பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வுகளில் சங்கத்தின் நிறைவாழ்வு இல்லப் பிள்ளைகளின் பெற்றோர்கள், பாதுகாவலர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### மயிலணி முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா, நாளை பி.ப.2.30 மணிக்கு, சி.மகேந்திரம் தலைமையில் நடைபெறும்.

சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி கலந்துகொள்வார்.

### 13 வருடங்களின் பின் வெற்றிலைக்கேணியில் திருநாள்!

வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்திருநாள் - 12 வருடங்களின் பின்னர் கொண்டாடப்பட்டு வருகின்றது. கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருநாள், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலி மற்றும் திருச்சொரூபப் பவனியுடன் நிறைவுறும்.

1991 ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் படையினர் தரையிறங்கியதையடுத்து, இப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். கடந்த வருடம் தங்களது சொந்த இடங்களில் மக்கள் மீளக்குடியேறியதைத் தொடர்ந்து, இவ்வருடம் திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

போரினால் சேதமடைந்த இவ்வாலயம் - பொதுமக்களின் நிதியுதவியால், முகப்பு மட்டும் திருத்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

# குடும்பத்தின் பொருளாதார வளத்திற்கு



ஸ்ரீ ஜீவரஞ்சினி

**'கணவன் நிரந்தரமான தொழில் வாய்ப்பை இழந்தநிலையில், பொழுதுபோக்காக ஆரம்பித்த சிறுகைத்தொழிலான மிக்ஷர் தயாரிப்பு - இன்று தொழிற்சாலையாக வளர்ந்து, சந்தை வாய்ப்பைப் பெற்று, குடும்பத்தின் நிரந்தரமான பொருளாதார வளத்திற்கு - உறுதுணையாக இருப்பதை நினைத்து நான் பெருமை அடைகின்றேன் என்கிறார், யாழ்ப்பாணம் ஜீவா மிக்ஷர் தொழிலக உரிமையாளர் திருமதி ஸ்ரீ ஜீவரஞ்சினி' அவர்கள்.**

நாங்கள் குடும்பமாக கொழும்பில் தான் இருந்தோம். பிறகு 1983 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த பிரச்சினையால், இங்கு வந்தோம். இங்கு, என்னுடைய கணவர் - மாணவர்களுக்கு ரியூசன் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்தார். அதுவும், இங்கு ஏற்பட்ட இடப்பெயர்வுகளோடு இல்லாமல்போனது. பின் றான் (RRAN) அலுவலகத்தில் - கப்பல் பிரயாணச்சீட்டு வழங்கும் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்தார். பின்னர், குடாநாட்டுக்கான ஏ-9 தரைவழிப் பாதை திறந்ததும், கப்பல் போக்குவரத்து இல்லாமல்போனதால், கணவரின் வேலையும் இல்லாமல்போனது.

அப்பதான் - நானும், என்னுடைய மசசாளுமாகச் சேர்ந்து வீட்டிலிருந்தவாறே, சிறியளவில் மிக்ஷர் தாயாரிக்கும் வேலையைச் செய்து, குடும்பத்துக்கான வருமானததைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டோம்.

மிக்ஷரை இங்கு சந்தைப்படுத்துவது கொஞ்சம் கஷ்ரமாகத்தான் இருக்கின்றது. ஏனென்றால் - இங்குள்ள வியாபாரிகளைப் பொறுத்தளவில், பொருட்களைக் மலிவாகக் கொள்ளனவு செய்யப்பார்ப்பார்களே தவிர, தரத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை. இப்படி அவர்கள், லாபத்தைப் பார்த்து - குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதால், எங்களுடைய மிக்ஷரையும் அவர்கள் கேட்பதுபோல் - குறைந்த விலையில் விற்பனை செய்யமுடியாமல் இருக்கிறது. இதனால், சந்தைவாய்ப்புப் பெரிதாக இல்லை.

ஆரம்பத்தில் மிக்ஷர் தயாரிக்கும்போது, "டை" பாவிப்பதில்லை. ஆனால், இப்ப 'டை' போட்டுத் தரும்படிதான் கேட்கிறார்கள். ஏனென்றால், வாங்குகின்ற சனம் - மிக்ஷர் கவர்ச்சியாக இருப்பதைப் பார்த்துத்தான் வாங்குகிறார்கள். அதற்காக, நாங்கள் கண்டபடி எதையும் பாவிப்பதில்லை. இரசாயனக் கலவைகளைப் பாவித்து மிக்ஷர் செய்தால், அதைச் சாப்பிட்ட பின்னர் - வயிறு பொருமலாக இருக்கும். ஆனால், சனங்கள் அதைப் பற்றி சிந்திப்பதில்லை. அதனால், நாங்களும் இப்ப சிவப்பு, பச்சை நிறங்களைக் கொண்டு 'டை' பாவித்து கடலையைக் கலந்துதான் மிக்ஷர் செய்கிறம். இந்தத் தொழிலை ஆரம்பித்து, சிறிது காலத்துக்குப் பிறகு - இரண்டு பேர் இங்கு வேலைக்கு வந்தார்கள். அவர்களும், பிறகு ஏலாது என்று நின்றதால் - இப்ப நான்தான் இதைச் செய்கிறேன். இதோட

**சந்திப்பு**
**உஷா, கலானந்தி**

பருத்தித்துறை வடையும் செய்கின்றேன். வேலை கஷ்டம்தான். ஆனால், இலாபம் இருக்கிறது. ஆரம்பத்தில் பக்க வருமானம் பெறும் நோக்குடன், பொழுது போக்காக ஆரம்பித்து - இன்று ஒரு தொழிற்சாலையாக மாற்றியிருப்பதுடன், பிரதான வருமானம் பெறும் தொழிலாகவும் மாற்றம் கண்டுள்ளது.

காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, மதிய உணவும் செய்து வைத்தவுடன் - இரண்டு மணிக்கு மிக்ஷர் செய்ய ஆரம்பித்தால் - ஏழு, எட்டு மணிவரை அத்தோடே நேரம்போகும். அதால, பிள்ளைகளின் கல்வியில் நான் கவனம் செலுத்துவது குறைவாக இருக்கின்றது. ஆனால், இதை எனது கணவன் கவ னித்துக் கொள்கிறார். அவரிடமிருந்து பூரணமான ஒத்துழைப்பு கிடைக்கிறதால அது ஒரு தாக்கம் மாதிரித் தெரியவில்லை.

ஆனால், நெருப்புக்கு முன்னிருந்து வேலை செய்கிறது கஷ்டமாகத்தான் இருக்கிறது என்றாலும், தொழில்ரீதியாக எங்களுக்கு என்ற ஒரு இடத்தைப் பெற்று வருகிறோம். இப்ப அநேகமாக, வீடுகளில் நடக்கின்ற கொண்டாட்டங்களுக்கும் - ஓடருக்கு மிக்ஷர் கொடுக்கிறோம். அதால கிழமையில், 30 - 60 கிலோவரை செய்து கொடுக்கிறோம். அதோட, ஐசிங் கேக்கும் செய்து கொடுக்கின்றோம் என்கிறார் ஸ்ரீ ஜீவ்ரஞ்சினி.

# பெண்களும் உறுதுணையாக இருப்பது பெருமையே!



# தாயகத்தின்

# பெண் இயக்குநர் குயிலினியின்

# உப்பில் உறைந்த உதிரங்கள்

கடந்த மே மாத இறுதியில் சுவிஸின் அழகு கொழிக்கும் நகரமான லுசர்ண் நகரில், அன்ரன் பொன்ராசா -தாயகத்திலிருந்து வெளிவந்திருக்கும் திரைப்படங்களின் ஒன்றான 'உப்பில் உறைந்த உதிரங்கள்' திரைப்படத்தின் பிரத்தியேக் காட்சி ஒன்றை ஒழுங்குசெய்து, அத் திரைப்படத்தை விமர்சிப்பதற்காக சுவிஸில் வாழும் கலைஞர்கள் மற்றும் விமர்சகர்களுக்கு அழைப்புவிடுத்திருந்தார்.

இவர்களுடன், சுவிஸில் இருக்கும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இத்திரைப்படத்தை இயக்கிய குயிலினி, இசையமைப்பாளர் இசையருவி மற்றும் இத்திரைப்படத்தை தயாரித்த நிதர்சனம் பொறுப்பாளர் சி.சேரலாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தது இங்கே மிக முக்கிய நிகழ்வாக அமைந்தது.

இவர்கள், திரைப்படம் சம்பந்தமான தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டதுடன் நின்றுவிடாது, திரைப்படம் சம்பந்தமான நிறைகளைவிடக் குறைகளை சுட்டிக்காட்டும்படி கேட்டுக்கொண்டதுடன், அவற்றை பெருமனதுடனும் இன்முகத்துடனும் ஏற்றுக்கொண்டது, அவர்களது எதிர்கால திரைத்துறையின் வெற்றிக்கான அறிகுறியாகவும் தென்பட்டது.

இந்நிகழ்வு - தமிழீழத் திரைப்படங்கள் மூலம் இலங்கையில் வாழும் தமிழ்ச் சமுகத்தின் பிரச்சினைகள், திரைக் கலை வடிவாகக் கொண்டுசெல்லத் தொடங்கியதன் அறிகுறியாகவே தென்பட்டது.

**உப்பில் உறைந்த உதிரத்தின் கதைக்கரு -**

தமிழீழத்தின் கிளாலி பகுதியில் அமைந்திருக்கும் கடற்படைத்தளம், அங்கிருக்கும் அதிசக்தி வாய்ந்த பீரங்கி மற்றும் கடற்படைப் படகுகளினால் அப்பகுதி மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

அதாவது, கடற்படையினரின் தாக்குதலால் பல அப்பாவிக் குடும்பங்கள் அழிக்கப்படுகின்றன. இச் சமூகத்தில் வாழும் ஒரு யுவதி, இப்படியான ஒரு தாக்குதலால் தன் உறவுகளை இழந்து நிர்க்கதியாகிறாள். பின்னர் இவள் ஒரு பெண் கடற்புலியாக மாறி, சக போராளிகளுடன் அப்பகுதி மக்களுக்கு வினையாக இருக்கும் அக் கடற்படைத் தளத்தை தகர்க்கப் புறப்படுகிறாள். ஆனால், அவர்கள் நினைத்தது நடைபெறாமல் போவது மட்டுமல்ல அப் பெண்போராளி குண்டுபட்டு, சமர் நடைபெற்ற கடற்பரப்பில் தனித்துவிடப்பட்டு விடுகிறாள்.

**⊗ பின்னர் அப்பெண் போராளிக்கு என்ன நடந்தது?**

**⊗ அவள் கனவு நனவானதா?**

என்பதன் உண்மைக் கதையைக் கருவாக்கியே உப்பில் உறைந்த உதிரம் படைக்கப்பட்டிருக்கிறது.

இத் திரைப்படம், மிக யதார்த்தமாக - ஒரு யுத்த களத்தில் இருப்பது போன்ற உணர்வை உருவாக்கும் விதத்தில் படமாக்கியிருப்பது இத்திரைப்படத்தின் மாபெரும் வெற்றியாகும்.

இத்திரைப்படத்தை உருவாக்கிய குயிலினிக்கு, இது முதல் திரைப்படமாக இருந்தபோதிலும் - இத்திரைப் படத்தைப் பார்ப்பவர்களுக்கு, இது - இவரது முதல் திரைப்படமாக எண்ணவே முடியாதுள்ளது.

இத்திரைப்படத்தின் காட்சிகள்- உண்மையாகவே கடலுக்குள் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருப்பதும், தாக்குதல் காட்சிகளுக்காக நிஜ ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருப்பதும், உண்மையான போராளிகளே அப்படத்தின் கதாபாத்திரங்களாகியிருப்பதும் அத்திரைப்படத்தின் யதார்த்தத்தின் வெற்றிக்கு மென்மேலும் துணையாகியிருக்கிறது.




மேலும், கருமையான இருளைக் கிழித்துக்கொண்டு சீறிப்பாயும் துப்பாக்கிக் குண்டுகளும், தீப்பிளம்புகளும் மேற்கத்திய படங்களுக்கு நிகராகத் தெரிந்தாலும் - தாக்குதலின் போதும், உயிரிழக்கும்போதும், எந்தக் கதாபாத்திரமும் சினிமாத்தனமற்று கதாபாத்திரத்தோடு வாழ்ந்திருப்பதும் நம்மையறியாது நம்மை திரைப்படத்தோடு வாழவைத்திருக்கிறது.

ஒரு மாபெரும் கூட்டத்தை - தனி மனிதனாக துரத்தியடிக்கும் போலிக் கதாநாயகர்களைக் காட்டாது, பலம் பொருந்திய ஒரு கடற்படைத் தளத்தை வெற்றிகொள்ள, அவர்கள் படும் இன்னல்களும் அவஸ்தையும் போராளிக் கதாபாத்திரங்கள் மேல் எம்முள் ஒரு பாசப் பிணைப்பை உருவாக்குகிறது.

எதிரிப்படையாகக் காட்டப்படும் கடற்படையைக் கொச்சைப்படுத்தாது, தாக்குதல்களின்போது இடம்பெறும் மரணங்களைக் கூட - குரூர வாடையே வீசாது இயக்கியிருக்கும் குயிலினிக்கும், சக தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத்தின் வெற்றிக்கு உறுதுணையாகியிருக்கும் அனைத்துக் கலைஞர்களுக்கும் - வாழ்த்துக்களை மனம் திறந்து வையகம் கேட்கும் வண்ணம் சொல்லியே ஆக வேண்டும்.

நிறைகளை மட்டுமே கூறி, குறைகளை விட்டுவிட்டால் அதுவே எமது வளர்ச்சிக்குத் தடையாகிவிடும்.

எனவே அவற்றையும் கொஞ்சம் தொட்டுச் செல்ல விரும்புகிறேன்.

1. கதையை பெண் கதாபாத்திரத்தின் **Flash back** மூலம்



'உப்பில் உறைந்த உதிரங்கள்' இயக்குநர் குயிலினியுடன் கட்டுரையாளர் அஜீவன், இசைப்பிரியன்.

சொல்லாமல் நேரடியாகவே பொதுப்படையாக சொல்லியிருக்கலாம்.

2. பாடல் மூலமாக சொல்ல முனைந்த அவலங்களை காட்சி வாயிலாகச் சொல்லியிருக்கலாம்.

3. கடற்படையினரின் பலத்தை இன்னும் சற்று வலுவாகவும் அவர்களது கோணத்தில் சில காட்சிகளையும் அமைத்திருக்கலாம்.

**ஓர் பார்வை - சுவிஸிலிருந்து அஜீவன்**

4. சிங்களப் பேச்சில் தெரியும் தமிழ் வாடை தெரியாது, குரல்களைத் தேர்வு செய்வதற்கு எதிர்காலத்தில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

5. **Special effect** காட்சிகளை முடிந்த அளவு தவிர்ப்பது நல்லது.

6. படத்தின் பாடலை ஆரம்ப எழுத்தோட்ட இசையாகவும், இறுதியின் முடிவு எழுத்தோட்ட இசையாகவும் பாவித்திருத்திருந்தால் - படம் முடிந்து வந்த பின்னரும், சாந்தனின் குரல் எம்முள் ஒலித்துக் கொண்டே இருந்திருக்கும்.

மேற்சொன்னது போன்ற ஒரு சில குறைகள் தெரிந்தாலும் - காலம், நேரம், இடம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால் - அனைத்து வளங்களும் கொண்ட நாடுகளின் படைப்புகளிலும் தவறுகள் உள்ளன. ஆனால், படைப்பாளிகளின் கவனத்துக்கு - இவை முன்வைக்கப்பட்டால் மட்டுமே, தரமான படைப்புகள் எதிர்காலத்தில் உருவாக உதவியாக இருக்கும்.

இருப்பினும் - இத்தனை காலமும் இப்படியொரு சினிமா எப்போது வரும் என்று அங்கலாய்த்தவர்களுக்கும், இப்படியும் முடியுமா என்று கேள்வி கேட்டவர்களுக்கும் பதிலாக - நம்பிக்கை தருவதற்கு வந்திருக்கிறது உப்பில் உறைந்த உதிரங்கள்.

# ஒரு பூவின் பயணம்



**நாளை எங்கள் பெண் குழந்தைகள்**
**புது உலகம் அமைப்பர்**
**நானும், நீயும்**
**கைகோர்த்து நடப்போம்**
**பெண்கள்**
**சுதந்திரமாக உலாவருவர்**

என்ற பாமதியின் நாளை பற்றிய அழகான கனவு, இன்றைய நவீன பெண்ணிலைவாதத்தின் வழிப்பட்டதாகும். நவீன பெண்ணிலைவாதத்தை, பண்பாட்டுக் கலாசாரப் பெண்ணியம் என்றும் அழைக்கலாம். பெண் காலங்காலமாக- சமூக, கலாசார விழுமியங்களால் க்ட்டப்பட்டிருக்கிறாள். அவளது தளைகளைப் போக்கிக்கொள்ள அவள் பெரிதாக முயற்சிப்பதில்லை.

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் மேற்கோளின்படி "**மருட்சி.... பயம் என் விழிகளில் இருப்பதா அழகு? நான் எதற்கு அஞ்சவேண்டும்? யாருக்கு அஞ்சவேண்டும்? என்று இவள் நினைப்பதில்லை. ஏனெனில், பெண்ணின் உடற்கூற்றியலே அவள் அஞ்சுவதற்கு ஒரு காரணியாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சம் அவளுடைய பொருளாதார சுயசார்பினை உறிஞ்சுகிறது. அவளுடைய கல்வியைப் பயனற்றதாக்குகின்றது. அவளுடைய திறமைகளைக் குடத்தினுள் வைத்து மூடிவிடுகிறது.**" பெண்ணின் இத்தகைய உணர்வு நிலை உயர்த்தப்பட வேண்டும் என்பது, நவீன பெண்ணிலைவாதக் கோட்பாடாகும்.

பெண்ணின் - ஆளுமையும், மனநிலையும் தகர்க்கப்பட்ட நிலையில் - அவள் உலகினை வேறொருவர் கண்களின் மூலமே காண்கிறாள். பெண்ணடிமைத்தனத்தை, பெண் தன்மீது சுமத்திக் காவிச்செல்வதே - தற்கால உலகின் மிகப்பெரிய கிறுக்குத்தனமாகச் சித்தரிக்கப்படுகிறது. சமூகம் படைத்துள்ள மரபுகளின் வழியொழுகி, தன்னை நல்ல பெண்ணாக நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு

**அத்தியாயம் 11**

பெண்ணுக்கும் உள்ளது. இதனைக் கேலிசெய்து எழுதப்பட்ட தஸ்லீமா நஸ்ரீனின்- "**ஒழுக்கம்**" என்ற கவிதையில் தனது இறுதிவரிகளில், எமது சமூகப் படிமானத்தையே தகர்க்கின்றது.

**நீ ஒரு பெண்**
**அதை நீ மறக்காமலிருப்பது நல்லது.**
**உனது வீட்டுப் படிதாண்டி நீ -**
**வரும்போது**
**ஆண்கள் ஓரக் கண்களால்**
**உன்னைப் பார்ப்பார்கள்**
**குறுகிய சந்தின் வழியில்**
**நீ நடந்து போகும்போது**
**ஆண்கள் உன்னைப் பின்**
**தொடர்வார்கள்**
**விசிலடிப்பார்கள்.**
**.............................**
**நீ ஒழுக்கமுள்ளவள் எனில்,**
**திரும்பிப் பார்ப்பாய்**
**இல்லாதவள் என்றால்**
**உன் பாட்டுக்குப் போவாய்**
**இப்போது நீ போய்க்கொண்டிருக்கிறாயே!**
**அது போல -**

பெண்கள் - அரசியல், பண்பாடு, பொருளாதார, ஆன்மீகப் பரிமாணங்களில் -ஆண்களுக்கு நிகரான சம உரிமை பெறவேண்டும் என்பதோடு, எதனுடனும் கூட்டுச்சேராமல் தனித்துவமாக பெண்களின் வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தையும் அறிந்து, பிரச்சினைகளைக் களையும் நோக்கோடு கூட்டுச்சேராப் பெண்ணியம் இயங்கிவருகிறது.

மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் - பெண்கள் கூட்டமைப்புக்களை உருவாக்கி, சமூகத்தில் சகல பணிகளையும் செயற்படுத்தும் தகைமையைப் பெறுவதைச் சுட்டுகிறது. இதனை முன்னெடுப்போர், பெண்ணியவாதிகள் அல்லர். இவர்களின் கருத்தினை கீழ்க்காணும் கனிமொழியின் வரிகளில் காணுங்கள்

**"இது என்ன பெண் உரிமை?**
**எனக்குப் புரியவில்லை.**
**உலகளாவிய கருத்தே**
**'எல்லோருக்கும் உரிமை' என்றாகிக்**
**கொண்டு**
**வரும்போது , பெண்ணினம்**
**மட்டும் உரிமை கேட்டு ஏன்**
**போராட**
**வேண்டும்.**
**இது மனித**
**உரிமை.**
**பெண் ஏன்**
**ஆணைப்போல**
**இருக்க வேண்**
**டும்?**
**பெண் முதலில் தன்**
**னைத்தானே**
**ஏற்றுக்கொள்ள தயாராக வேண்டும்.**
**தான் பெண்ணாகப் பிறந்ததற்கு பெருமைப்பட**
**வேண்டும். ஆணுக்கு,**
**நிகர் பெண் என்பதை ஒப்புக்கொள்ளமுடியாது.**
**பெண் மற்றொன்றைபோல்**
**இருக்க வேண்டிய அவசியம் இல்லை"**

பெண் விடுதலையானது - மனித இனத்தினை, அதன் தாய்மைப் பண்பைச் சிதைத்துவிடும் என்ற கோட்பாட்டோடு, பெண்ணியத்துக்கு எதிரான "**மனித இன மேம்பாட்டு பெண்ணியம**" தோற்றம்பெற்றது. மனித இன உற்பத்தியில், பெண் ஈடுபடுதல் அவளது மகத்துவமே என்பது இக்கொள்கையைச் சார்ந்தோரின் கருத்தாகும்.

**"பிரசவத்தைச் சந்திக்காத பெண்ணோ**
**நெருப்பைச் சந்திக்காத தங்கமோ**
**உளியைச் சந்திக்காத சிற்பமோ**
**யுத்தத்தைச் சந்திக்காத தேசமோ**
**முழுமையடைவதில்லை"**

என்பது போன்ற, தாய்மையின் முக்கியத்துவம்பேசும் வரிகள் இக்கொள்கைக்குச் சான்றாகக் காட்டலாம்.

இதுவரை பல்வேறுபட்ட பெண்ணிலை நோக்குகள் பற்றிப் பார்த்தோம். பெண் - தனிமனிதன், குடும்பம், சமூகம், மதம், அரசினாலான அடக்குமுறைகளைச் சந்திக்க வேண்டியவளாக உள்ளாள். இந்நிலை வேறுவழியின்றி, பெண்ணைப் போர்க்குணம் கொள்ள ஏவிற்று.

**"நாமிந்த உலகிற்கு**
**நரகத் துழலவா வந்து பிறந்தோம்?**
**புதைகுழிகளில்**
**சாகாத பிணங்களாய்**
**சதா வாழவா வந்தோம்?"**

என்ற சுல்பிகாவின் கவிதையில் கொப்பளிக்கின்ற ஆத்திரம் - அடங்கிக் கிடந்து, அவலப்பட்டு, துணிந்து எழுகின்ற பெண்ணின் துடிப்பு இல்லையா? ஒவ்வொரு சமூகத்திலும்

**போற்றி தாய்க்கென்று பொற்குழல் ஊதி...**

பெண்கள் கொண்டிருக்கத்தக்க நெருக்கடிகள் வேறுபடுகின்றன. இதன் காரணம், ஒவ்வொரு சமூகத்தினாலும் - காலங்காலமாகப் பிரேரிக்கப்பட்ட பெண் மீதான - கலாசார, பண்பாட்டு ரீதியிலான நியதிகள் வேறுபடுவதாகும். ஒரு தேசத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கம், இன்னொரு தேசத்தில் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத நடைமுறையாக உள்ளது. இது உலகப் பொதுமையற்ற, காரணகாரியமற்ற பெண்மீதான அடக்குமுறைக்கு வழிவகுத்துள்ளது. அதனால், இப்பால்ரீதியான அடக்குமுறைகளை இல்லாதொழிப்பது என்பது, மிகச்சிக்கலான விடயமாக உள்ளது.

யாழ்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரை, இவ்வடக்குமுறைகள் மூன்று வகைப்பட்டனவாக இருப்பதை, கடந்தகாலப் "**பயணம்**" ஒன்றில் கண்டோம். அவை பெண்கள்மீது - பெண்களாலும், ஆண்களாலும் தனக்குத்தான் பழக்கப்படுத்திய மரபுகளாலும் ஏற்படுகின்றன. இங்கு பெண்ணிய அடக்குமுறைகள் போலவே, பெண்ணியச் சிந்தனைகளும் - மிகத்தெளிவானவையாகக் காணப்படவில்லை. உதாரணமாக- வரதட்சணைப் பிரச்சினைக்காகப் பெண்ணைத் தீ வைத்துக் கொளுத்துதல், இந்தியச் சமூகத்தில் பொதுவானது. இங்கு அத்தகையநிலை காணப்படவில்லை. ஆனால், திருமணமாகாத இளம்பெண்களின் ஏக்கம், இங்கு அதிகரித்துவரும் ஒரு பிரச்சினையாகும்.

அத்துடன், எமது சமூகத்தில் எழும்பும் பெண்ணிலை நோக்குகள், இருவேறுபட்ட நிலைகளில் உள்ளன. இங்கு பெண்ணுரிமை பற்றிய போர்கள் மிகத் தீவிரமாக எழும்பவில்லை. ஏனெனில், தேசம் - மனித உரிமையை வேண்டி நின்றபொழுதில் அவ்வுரிமைகளுக்கான போர்களும், யுத்தங்களும் நாட்டை மூடிப் பரவின. பெண்களும், ஆண்களோடு ஆயுதம் ஏந்திப் போராடி "**புதிய வரலாறு**" எழுதத் தலைப்பட்டனர்.

அதனால், ஈழத்துப் பெண்கள் சகல தளைகளிலிருந்தும் - 'விட்டு விடுதலையாகி' வாழ்வதான கருத்தினை உலகரங்கில் அவர்கள் முன்வைத்துள்ளனர். இது ஒருபுறமிருக்க, ஏனைய பெண்களின் நிலை இவர்களிலிருந்து வேறுபட்டது. மிகவும் சமூகமயப்படுத்தப்பட்ட - காலங்காலமாக இருந்து வருகின்ற "**தளை**"களுள் அவர்கள் வாழ்ந்துகொள்கின்றனர். அத்துடன், அதைப்பற்றிக் கருத்தெடுத்து, போர்புரிதலுக்கான ஊக்கமும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**ச.சாரங்கா**

சீதனம் போன்ற சிக்கலான விடயங்களைக்கூட, பத்திரிகை அல்லது மேடைப்பேச்சு நிலைகளுக்கு அப்பால் அலசப்படுவதில்லை. குடும்ப கௌரவமும், அவர்கள் செய்யும் தொழிலும், ஆண்களின் "**விலை**"யைத் தீர்மானித்துள்ளன. பெண்ணின் திருமண வாழ்வை நிர்ணயிக்கும் காரணிகளில் - பணம் முதன்மை வகிக்கின்றது. இவை "**சொல்லாத செய்தி**"களாய் உள்ளன. அதனால், இருவேறுபட்ட நோக்குகளில், எங்களின் '**பெண்ணிலை**' காணப்படுகின்றது எனலாம். அவற்றைத் தொடரும் பயணங்களில் தரிசிப்போம்.

*(பயணம் தொடரும்)*

# உதடு அழகாக இருக்க

முகத்தில் - கண்களையடுத்து முக்கியத்துவம் வாய்ந்தது உதடுகள். சந்தோஷம், கோபம் போன்ற உணர்ச்சிகளை கண்கள் எப்படி வெளிப்படுத்துகிறதோ, அதைப்போலத்தான் உதடுகளும் சோகமாக இருந்தால் - கீழ்நோக்கியும், சந்தோஷப்படும்போது - மேல் நோக்கியும் இருக்கும்.

அந்தக்காலத்தில் பெண்கள், உதட்டை அழகுடன் பராமரித்தார்கள். அப்போது லிப்ஸ்ரிக் இல்லை என்பதால், மருதாணி இலைகளை அரைத்து, உதடுகளில் பூசிச் சிவப்பாக்கிக் கொள்வார்களாம். ஐரோப்பியப் பெண்கள் பீற்றூட் சாறைப் பூசிக் கொள்வார்களாம்.

முன்னைய காலத்தில், ஆட்டின் கழுத்திலிருந்து எடுக்கப்படும் கொழுப்பு, மீன்செதில்களைப் பயன்படுத்தி - முனபு லிப்ஸ்ரிக் தயாரித்திருக்கிறார்கள். ஆனால், இப்போது காய்கறிகளில் கிடைக்கும் கொழுப்பினால்தான் லிப்ஸ்ரிக் தயாரிக்கிறார்கள்.

கண்ணுக்கு அடியிலுள்ள சருமத்தைப் போன்று, உதடுகளிலும் எண்ணெய்ச் சுரப்பிகள் கிடையாது. அதனால், அதிக குளிர், அதிக வெப்பத்தை உதடு தாங்கமுடியாமல் உடைந்து, காய்ந்து போய்விடும். **Chapstic lipbalm** உதடுகளில் பூசலாம். பக்கவிளைவுகள் கிடையாது. உதடுகளுக்கு நீர்ச்சத்தையும், கொழுப்புச் சத்தையும் கொடுக்கும்.

❋வாய்ப்பகுதியைச் சுற்றி, உதடுகளின் ஓரத்தில் புண் இருக்கும். இதற்கு விற்றமின் E உள்ள சன்ஸ்கிறீன் லோஷனை பயன்படுத்தல் நல்லது. ஊட்டச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிடவேண்டும். நிறையத் தண்ணீர் குடிக்கவேண்டும்.

❋ கொழுப்புச்சத்து குறையக்குறைய உதடு சுருங்கி, வயதான தன்மையை அடையும். அதற்கு வெளிப்புறத்திலிருந்து ஊட்டம் தருவது அவசியம். உதட்டிற்கு வாசலின் தடவுவது மிகவும் அவசியம்.

❋ வேறு எந்த மேக்கப்பும் (**Make up**) இல்லாவிட்டாலும், லிப்ஸ்ரிக் மட்டும் போட்டுக் கொண்டாலே, முகம் பளிச்சென்று இருக்கும்.

❋ தரமில்லாத தவறான லிப்ஸ்ரிக் பயன்படுத்தினால், உதட்டில் வெடிப்பு ஏற்படும். உதட்டின் தோல் உரியும். ஈயோசின் என்ற பிக்மெண்ட் கலந்து செய்யப்படும் லிப்ஸ்ரிக் தரம் குறைவாக இருக்கும்.

**உதட்டைப் பாதுகாக்க சிகிச்சை**

இரவில் ஒரு கரண்டி கிளிசறின் எடுத்து, உதட்டில் பூசி - ஐந்து நிமிடம் மசாஜ் செய்யவும். காலையில் உதட்டில் பாலாடையைத் தடவி - 15 நிமிடம் ஊறிய பிறகு துடைக்கலாம்.

**உதட்டை எச்சிற்படுத்துவது தவறு**

உதடு காய்ந்திருக்கிறது என்று, அடிக்கடி உதட்டை எச்சிலால் ஈரப்படுத்தக்கூடாது. இது தவறு. அப்படிச் செய்தால், உதட்டில் இருக்கும் கொஞ்ச ஈரப்பதமும் போய்விடும். எச்சிலில் இருக்கும் பற்றீரியாவால், உதட்டில் புண்கள் ஏற்படலாம்.

**உதடுகளுக்கு...**

❋ மேல் உதட்டின் இரண்டு ஓரங்களிலிருந்தும், மசாஜ் செய்து உதட்டிற்கு நடுவே கொண்டுவரவும். கீழ் உதட்டின் நடுவிலிருந்து, மசாஜ் செய்து ஓரங்களுக்கு கொண்டுவரவும்.

❋ A E I O U ஆங்கில உயிரெழுத்துக்களை நிறுத்தி, மெதுவாகத் தொடர்ந்து 20 நிமிடம் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

❋ வெள்ளை நிறமானவருக்கு, எல்லா நிற லிப்ஸ்ரிக்கும் பொருத்தமானதாக இருக்கும்.

❋ கறுப்பு நிறமானவர்கள், பொதுவான நிறங்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

**உதடு பெரிதாகத் தெரிய..**

முதலில் தேவையான நிற லிப்ஸ்ரிக் பூசிக்கொள்ளவேண்டும். பின்பு, வெள்ளை நிற லிப்ஸ்ரிக்கால் உதட்டின் நடுவில்



தடவவும்.

உதடு பளிச்சென்று பெரிதாகத் தெரியும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## எங்கள் வீட்டிற்கு நாம் செல்வோம்!

ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க தடத்தைப் பதித்தது 'பொங்கு தமிழ்' நிகழ்வு. தமிழர் தாயகத்தின் பல பகுதிகளும் நெருக்குவாரத்துள் கட்டுண்டு கிடந்தபோது, மக்களின் மீது அடக்குமுறை அழுந்தியபோது - சுதந்திரத்திற்கான நம்பிக்கையையும், உறுதியையும் வெளிப்படுத்திச் சொன்னது 'பொங்கு தமிழ்'.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் - விடுதலை வரலாற்றில் ஆற்றிவந்த அரும்பணிகளுள் 'பொங்கு தமிழ்' நிகழ்வு - பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முதன்மை கொண்டது என்றால் மிகையில்லை என்றே சொல்லலாம்.

தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சியை, சுதந்திர வேட்கையை, ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டு நிற்கும் பலத்தை - உலகெங்கும் அதிரச் சொன்ன 'பொங்கு தமிழ்' -

இன்று மற்றுமொரு முக்கிய தருணத்தில் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலை, தமிழினம் சந்தித்து நிற்கும் நெருக்கடிகளை ஓங்கியொலிக்கத் தயாராகி வருகின்றது.

சமாதான வழிமுறை தமிழ்மக்களுக்கான உரிமையை, சுயாட்சியைப் பெற்றுத்தரும் என எதிர்பார்த்து - அரசாங்கத்துடனான அமைதிப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்றுவந்த போதும் -

சர்வதேசத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து - ஏராளம் இடர்ப்பாடுகள், ஆத்திரமூட்டல்கள், திட்டமிடப் பட்ட தாமதங்களைக் கடந்தும் - விடுதலைப் புலிகள் இன்னமும் சமாதான முயற்சிகளில் உறுதியாக நிற்கும் நிலையிலும் -

அரசாங்கமும், அரசபடைகளும் தமிழ்மக்களின் மனதில் அமைதிக்கான நம்பிக்கையை வளர்க்கக்கூடியதாக எத்தகைய நகர்வுகளையும் செய்யவில்லை.

போர்நிறுத்தம் ஆரம்பமாகி மாதங்கள் பல சென்றுவிட்டபோதும் - தமிழ்மக்கள் இன்னமும் யுத்தம் தந்த பாதிப்புக்களிலிருந்து மீண்டுவரவில்லை. அவர்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணி ஆமைவேகமாகி, நத்தைவேகமாகி - இன்று அதுவும் காணாமற் போய்விட்டது.

சமாதானம் வந்துவிட்டது, இனி எமது சொந்த வீடுகளுக்குச் செல்லலாம் என எதிர்பார்த்து அகதி முகாம்களிலும், நண்பர்கள் - உறவினர்கள் வீடுகளிலும் காத்துக் கிடந்த மக்கள் - எதுவித மீட்சியுமற்று, தமது வீடு செல்வது பற்றிய கதைகளைக் கண்ணீரோடு பகிர்கின்றனர்.

ஒரு பக்கம் அமைதிப் பேச்சுக்கள் என்றும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்றும் உரக்கப் பேசிக் கொண்டு - மறுபுறம், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற மனிதாபிமானமற்ற ஆக்கிரமிப்புக்களால் - மக்களது சுமுகவாழ்வு சூறையாடப்பட்டுக் கொண்டு வருகிறது.

அதுதான் போதாதென்று - புதிய முகாம்களும், காவலரண்களும் அமைக்கும் வேலைகள் திடீர் வேகத்தைக் கண்டிருப்பதோடு,

பல்லாண்டுகளாக மக்களை வாட்டிவதைத்த இராணுவச் சுற்றிவளைப்புக்களும், தேடுதல்களும் - மீண்டும் தொடங்கி மக்களை இன்னும் அச்சுறுத்தவைக்கின்றன.

உண்மைநிலை இவ்வாறிருக்க, அரசாங்கமோ - சர்வதேச அரங்கில் தமிழ்மக்களின் துயர்துடைப்பதாய் முழங்கிக்கொண்டு, தனக்குத் தேவையான நிதியை - தமிழர்களின் வேதனையின் பேரில் திரட்டிக் கொள்ளவும் தொடங்கிவிட்டது.

இந்தநிலையில் - தமிழ்மக்களின் மீது அழுந்திக் கிடக்கும் பிரச்சினைகளை, நெருக்குவாரங்களை ஒன்று திரண்ட குரலில் - உலகெங்கும் எடுத்துச் சொல்ல - மீண்டும் 'பொங்கு தமிழ்' நிகழ்வை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் களமிறங்கியிருக்கிறார்கள்.

அன்று - முதலாவது 'பொங்கு தமிழ்' நிகழ்வு, எந்தளவு முக்கியமான திருப்பத்தைத் தமிழர் வாழ்வில் தந்ததோ - அதேபோன்று - இப்போது நடக்கவிருக்கும் பொங்கு தமிழும் புதிய திருப்பத்தைத் தருவதாக அமைய வேண்டுமென்ற நம்பிக்கையுடன் - பல்கலைக் கழக மாணவர்கள் பெருமுயற்சியெடுத்து வருகின்றனர்.

சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடியாது பேரவலங்களைச் சந்தித்து நிற்கும் மக்களுக்கு, அவர்தம் வீடுகளுக்குத் திரும்பக்கூடிய நிலைமை வந்தால் மட்டுமே - புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட முடியும், அதன்மூலமே சுமுகநிலை தோன்றும், அந்தச் சுமூகநிலையே அமைதிக்கான உறுதுணையுமாகும் என்ற வகையில் -

'எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காய், படையினரே - நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்'

- என்ற நிலைப்பாட்டை தமிழ்மக்கள் பொங்கு தமிழால் வலியுறுத்தவிருக்கின்றனர்.

சர்வதேசத்தின் கவனத்தைத் தொட்டுநிற்கப் போகும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு - அனைத்து மக்களும் ஒத்துழைத்து, அதில் பங்கேற்பதன் மூலமாக -

தமிழ்மக்களின் ஒருமித்த குரல் வழியே - மிகப்பெரும் அழுத்தத்தை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் கொடுத்து - அதன்மூலம் 'எங்கள் வீடுகளுக்கு நாங்கள் செல்லும்' உரிமையைப் பெறுவோமென உறுதிபூண்டு நிற்போமாக.

# சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக வட-கிழக்கு அபிவிருத்தியை முன்னெடுங்கள்

### தேசிய வர்த்தக சம்மேளனம் அரசுக்கு ஆலோசனை

வடக்கு - கிழக்குப் பகுதிகளில், அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்வதன் ஊடாக, விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று,

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர், அசோகா குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக, ரோக்கியோவில் கிடைத்த நிதியைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன்மூலம் - மீண்டும் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும். வடக்குக் கிழக்கில் செயற்படுத்த வேண்டிய உடனடித் திட்டங்கள் குறித்தும், நிதி பயன்படுத்த வேண்டிய முறைகள் குறித்தும், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் தேசிய கைத்தொழில் சம்மேளனம் என்பன இணைந்து தயாரித்த மதிப்பீட்டு அறிக்கையின்படி, செயற்பாடுகள் இடம்பெறும் என்று, தாம் நம்புவதாக தெரிவித்த அவர், நிதிப் பயன்பாட்டுக்காக அரசாங்கம் கெடுபிடிகளற்ற சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# தனக்கு உரிய கௌரவம் வழங்கப்படுவதில்லையாம்!

### கவலை தெரிவிக்கிறார் சந்திரிகா



(கொழும்பு)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட எனக்கு உரிய கௌரவம் வழங்கப்படுவதில்லை என்று, கவலை வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜனாதிபதி மாளிகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே - அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் உரையாற்றியபோது-

விடுதலைப் புலிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதுகின்ற கடிதங்களில் அவருக்குரிய கௌரவத்தைக் கொடுப்பதில்லை. அவர் இந்த நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்பது மறக்கப்பட்டுவிட்டதாகக் கவலை தெரிவித்தார்.

இதையடுத்து - உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கௌரவம் கொடுக்கச் சொல்கிறீர்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியான என்னையும் மறந்து விட்டீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

# கருங்குளவிகள் தாக்கி மூவர் ஆஸ்பத்திரியில்!

### அக்கராயனில் சம்பவம்

கருங்குளவிகள் கொட்டியதால் பாதிக்கப்பட்ட மூவர், அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, அக்கராயன் - கோணாவில் பகுதியில் கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் கருங்குளவிகள் தாக்கியதில், தம்பித்தரை (வயது 40), சசிதரன் (வயது 20), சிலுவைராசா (வயது 49) ஆகியோர் பாதிக்கப்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது வீசிவரும் கடும்காற்றினால், கருங்குளவிக் கூடுகள் மரங்களில் இருந்து உடைந்து விடுவதாலேயே அப்பகுதியால் செல்வோரைக் குளவிகள் தாக்குவதாகத் தெரியவருகிறது.

# மென்டிஸ் கொலையாளிகள் பயன்படுத்திய செலூலர் மீட்பு!

(கொழும்பு)

மேல் மாகாணசபை உறுப்பினர், சுனில் மென்டிஸ் படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து, பொலிஸார் செலூலர் தொலைபேசி ஒன்றை மீட்டுள்ளனர்.

அத்துடன் தடயங்களை ஆராய மோப்பநாய்களைப் பயன்படுத்திய பொலிசார், அந்த மோப்பநாய் அண்மையிலுள்ள ஐ.தே.க. அரசியல்வாதி ஒருவரின் வீட்டின் குளிர்சாதனப் பெட்டிக்கு முன்னால் சென்று அப்பால் செல்லாமல் நின்று விட்டதாகத் தெரிவித்தனர்.

மென்டிஸ் கொலையாளிகள் மீன்பார்சல் ஒன்றை கொடுக்கப் போவதாகக் கூறியே வீட்டுக்குள் நுழைந்தனர். ஐ.தே.க. அரசியல்வாதியின் வீட்டு குளிர்சாதனப் பெட்டியில் இருந்தே இந்த மீன்பார்சல் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுங்கத் தளை நீக்க ஆவணத்தில்

# பரிசோதகர் ஒப்பமிடாத வாகனங்களை பதிவுசெய்வதற்கு காலக் கெடு அறிவிப்பு!

மோட்டார் போக்குவரத்து தலைமை அலுவலக மோட்டார் வாகனப் பரிசோதகரால், சுங்கத்தளை நீக்க ஆவணத்தில் உறுதிப்படுத்தி ஒப்பமிடாத மோட்டார் சைக்கிள்களுக்கான, பதிவுகள் அடுத்த மாதம் 18 ஆம் திகதிவரை மட்டும் நடைபெறுமென, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேமாதம் முதல் வாரம் தொடக்கம் புதிய நடைமுறைகளின் கீழ் வாகனப்பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பதிவுகளின்போது, எம்.ரி.ஏ.-2 விண்ணப்பப்படிவம், விற்பனையை உறுதிப்படுத்தும் நிறுவன கடிதத்தலைப்பு, தலைமை அலுவலக மோட்டார் வாகனப் பரிசோதகரால் உறுதிப்படுத்தப்பட்ட சுங்கத்தளை நீக்க ஆவணம், காசுப்பற்றுச் சீட்டு, கிராம அலுவலர் உறுதிப்படுத்திய தேசிய அடையாள அட்டை நிழற்பிரதி, இரு புகைப்படங்கள் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

சுங்கத்தளை நீக்க ஆவணத்தில் தலைமை அலுவலக மோட்டார் வாகனப் பரிசோதகரின் ஒப்பம் இல்லாது, மேற்கூறப்பட்ட ஏனைய ஆவணங்களை உடையவர்கள் அடுத்தமாதம் 18 ஆம் திகதிக்கு முன் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு, மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வெண்புறா தொழில்நுட்பவியலாளருக்கு பிரித்தானிய நிபுணர்கள் விசேட பயிற்சி!

### 'ஆயிரம் பேருக்கு செயற்கை அவயவம்' திட்டமும் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்களுக்கு, விசேட தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

லண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன், இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி தெரிவித்தார். மேற்படி மூன்றுமாத காலப்பயிற்சியை வழங்குவதற்காக, லண்டனிலிருந்து விசேட தொழில்நுட்பவல்லுநர்கள் வருகைதரவுள்ளனர்.

லண்டன் தொழில்நுட்பவியலாளர்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வருகைதந்ததும் மூன்றுமாத விசேட பயிற்சிகள் வெண்புறா நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகியுள்ளன.

பயிற்சியினைத் தொடர்ந்து, தாயகத்தில் தமது அவயவங்களை இழந்து அல்லற்படும் சுமார் 1000 பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்துவதற்கான திட்டமும் வரையப்பட்டுள்ளதாக கே.பி.றெஜி மேலும் தெரிவித்தார்.

# இழுபறிக்குள்ளாகியிருக்கும் சமாதான முயற்சிகளும் படையினரின் தொடரும் யுத்தநிறுத்த மீறல்களும்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்று வந்த, அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்டுள்ள தேக்கநிலையை இன்னும் மோசமாக்குகின்ற விதத்தில், கடற்படையின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன.

கடந்த சனிக்கிழமை காலை ஏழு மணியளவில், முல்லைத்தீவிலிருந்து, 266 கடல் மைல் தொலைவில் சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் எண்ணெய் தாங்கிக்கப்பலைச் சுற்றிவளைத்த, கடற்படைக்கலங்கள், அதன் மீது தாக்குதல் நடாத்தி, மூழ்கடித்துள்ளன. அத்தோடு தாக்கப்பட்ட கப்பலிலிருந்த 12 மாலுமிகளையும் கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

அரசியல் பேச்சுவார்த்தைகள் தமிழீழ மக்களுக்குப் பயனைத்தராமல் போயுள்ளன.

இந்தவேளையில், படையினரின் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கைகள், நிலைமையை இன்னும் மோசமாக்கி வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றுவது போல், அரசு போக்குக்காட்டி வருவது ஒரு புறம் இருக்கையில், மறுபுறம் விடுதலைப் புலிகளைச் சீண்டும் நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் "சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளை, அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் அரசு மேற்கொண்டு வருகின்றது" என்றே தோன்றுகின்றது.

கடந்த ஓராண்டு காலத்தில், பல தடவைகள் யுத்தநிறுத்த மீறல்களைப் படையினர் புரிந்து வந்துள்ளனர். அவை தொடர்ந்தும் நடைபெற்று வருவது- கவலைக்கும், கண்டனத்திற்கும் உரிய விடயமாகும். "சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக, தமிழீழ மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் நியாயமான, நிரந்தரமான, கௌரவமான தீர்வு கிடைக்கவேண்டும்" என்று நம்பியிருக்கும் நல்ல இதயங்கள் யாவும் இப்போது கவலைப்படத் தொடங்கியிருப்பதில் வியப்பில்லைத்தான்.

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் குறித்து, பிரதமர் ரணிலின் அரசாங்கம், இதுவரை தெளிவாக - திட்டவட்டமாக எதுவும் கூறாமல், வெறும் வார்த்தைஜாலங்களையே அள்ளி வீசிவருகின்றது.


ரணில் விக்கிரமசிங்க

உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து- உத்தியோகபூர்வமாகப் பதில் அளிக்காமல், ரணில் விக்கிரமசிங்க 'இழுத்தடித்துக் கொண்டு போவதற்கு, 'சட்டச் சிக்கல்தான் காரணம்' என்று பலராலும் குறிப்பிடப்படுகின்றது. இதற்கு, இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பு இயற்றப்பட்டிருக்கும் விதத்தை, அதன் அமைப்பை அடிக்காரணமாகக் கொள்ளலாம்.

இலங்கையின் அரசியல் யாப்பானது, ஒரு சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கையின் அடிப்படையில் நன்றாகச் சிந்தித்து உருவாக்கப்பட்டதொன்றாகும். இந்தச் சட்டம் தமிழ் மக்களுக்கும், தமிழினத்திற்கும் எதிராக இயற்றப்பட்டதாகும்.

அடிப்படையில் இது ஓர் அநீதியான அரசியல் யாப்பாகும். இந்த அநீதியான அரசியல் யாப்பினை எதிர்த்து தமிழ் மக்கள் பல போராட்டங்களையும் நடாத்தியுள்ளார்கள். ஆகவே, இந்த அநீதியான அரசியல் யாப்பினூடே, தமிழீழ மக்களுக்கு ஒரு நியாயமான சமாதானத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது அறியாமையாகும்.

சிங்கள பௌத்த பேரினவாத நலனுக்காக உறுதியாகப் பேணப்பட்ட இந்த அரசியல் யாப்பினை மாற்றுவதென்றால், முதலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவில், நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவேண்டும். ஆனால், 'அப்படிப்பட்ட பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்கக் கூடாது' என்ற எண்ணத்தில் இலங்கையின் தேர்தல் விதிகளும் - பின்னர் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள விகிதாசார வாக்குமுறையின் பிரகாரம், எந்தக்கட்சிக்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை எளிதில் கிடைக்காது. இதற்குப் பின்னால், சர்வஜன வாக்குரிமை என்ற பூதமும் காத்து நிற்கின்றது.

இந்த இடத்தில் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்டலாம். தமிழினத்திற்குச் சாதகமாக இயற்றப்பட்டுச் சட்டமாக்கப்பட்ட சில உரிமைகளும், இந்த யாப்பின் கீழ் இன்னும் அமுலாக்கப்படாமலேயே உள்ளன என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். 'தமிழ் மொழி,


வே.பிரபாகரன்

அரசகருமமொழியாகும்' என்று இலங்கையின் யாப்பு தெரிவித்து நிற்கின்ற போதும் - இதுவரை காலமும், அது முறையாக அமுலாக்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, சிங்கள பௌத்த பேரினவாத நலனைக் குறிக்கோளாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்த யாப்பு, எதிர்காலத்தில் மாற்றப்படக்கூடாது என்பதற்காகப் பல சட்ட விதிகள் துணையாக நிற்கின்றன.

அதேவேளை, இந்த யாப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் மொழி சம்பந்தமான உரிமைகளோ யதார்த்த நிலையில் அமுலாக்கப்படாமல் இருக்கின்றன.

இப்படிப்பட்ட யாப்பினூடே, ஒரு இடைக்கால நிர்வாகத்தைக் கூட, முழுமையாகத் தரமுடியாத ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, எப்படி எதிர்காலத்தில் தமிழினத்தின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கப்போகின்றது? என்ற முக்கியமான கேள்விக்கு விடைதான் என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சரியான பாதையில், முறையாகச் செல்ல வேண்டுமானால், அதற்குரிய வழியாக நாம் இப்போதைக்குக் கூறக்கூடியது ஒன்றுதான்! சமாதானத் தீர்வில் அக்கறை கொண்டுள்ளதாகத் தம்மைச் சொல்லிக்கொள்ளுகின்ற உலக நாடுகள், அடிக்கடி வன்னிக்குப் பயணம் செய்வதையோ - அன்றி விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்டு அறிக்கைகளை விடுவிப்பதையோ உடனடியாக நிறுத்தி விட்டு - தங்கள் நேரத்தையும், செல்வாக்கையும் வேறு இடத்தில் பிரயோகிக்க வேண்டும்.

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகாவையும் இந்த உலக நாடுகள் ஒன்றாகச் சந்தித்துப் பேசவேண்டும். ஏனென்றால் பந்து இப்போது புலிகளின் பக்கமில்லை. அது அரசாங்கத்தின் பக்கத்தில் உள்ளது.



'இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பின் ஊடே, ஒரு நீதியான தீர்வு கிடைக்காது.' என்பதை இந்த உலக நாடுகள் நன்கே அறியும்! இந்த அரசியல் யாப்பை, தேர்தல் ஊடே மாற்றுவது எளிதில் இயலாத காரியம் என்பதும் - இந்த உலக நாடுகளுக்குத் தெரியும்.

ஆகவே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் சரியான பாதையில் செல்லவேண்டுமானால், இந்த அரசியல் யாப்பினை எவ்வாறு மாற்றுவது என்பது குறித்தே, இந்த உலக நாடுகள் கவலைப்பட வேண்டும். அதைவிடுத்து, வெற்று உறுதிமொழிகளுடன் வன்னிக்குச் செல்வதோ - அன்றி அறிக்கைகள் விடுவதோ எந்தவிதப் பயனையும் தராது!

'சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக நாட்டின் இனப் பிரச்சனையைத் தீர்ப்பேன்' - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளுக்கும், சமாதானத் தீர்வுக்கும் எனது கட்சியினரதும், எனது ஆதரவும் என்றும் இருக்கும் என்று - சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் அடிக்கடி தெரிவித்து வருகின்றார்.

ஆக தடையாக இருப்பது இந்த அரசியல் யாப்புத்தானே? எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி சந்திரிகாவையும், இந்த சமாதான அக்கறையுள்ள உலக நாடுகள் ஒன்றுசேரச் சந்திக்கவேண்டும். சமாதானத்திற்கு ஆதரவு என்று சொல்லிக்கொண்டிருக்கும் பிரதமரும், ஜனாதிபதியும் ஒன்றுசேர்ந்தால், இப்போதே உடனடியாகவே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன், இந்த அரசியல் யாப்பை மாற்றுகின்ற, முதல் அடியை எடுத்து வைக்கலாம்.

எனவே - உலக நாடுகள் தங்கள் கவனத்தையும், நேரத்தையும் கொழும்பில் தான் செலவழிக்கவேண்டுமே தவிர, வன்னியில் அல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுடைய கோரிக்கையை மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அவர்களது இடைக்கால நிர்வாகக் கோரிக்கையானது - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும், முன்னர் பல தடவைகள் ஜனாதிபதி சந்திரிகாவாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்!

தவிரவும், இடைக்கால நிர்வாகக் கோரிக்கையானது, நியாயமானதும், ஏற்புடையதானதுமாகும்! இலங்கைத் தீவில் சமாதானம் ஏற்படுவதை விரும்புவதாகச் சொல்லுகின்ற இந்த உலக நாடுகள், 'இந்த இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை, எவ்வாறு முறையாக, உத்தியோகபூர்வமாக அமுலாக்கலாம்' என்பது குறித்துத் தங்கள் சக்தியைப் பயன்படுத்துவதுதான் முறையானதாகும்.

உலக நாடுகள் இந்த வழியைக் கட்டாயம் முயன்று பார்க்கவேண்டும்! அப்படி முயன்று பார்த்து இந்த நடவடிக்கை வெற்றி பெற்றால், அது சமாதானத்திற்காக உலக நாடுகள் செய்திட்ட உண்மையான சேவையாக இருக்கும்.


சந்திரிகா குமாரதுங்க

இந்த முயற்சி வெற்றி பெறாவிட்டால், இலங்கையின் சிங்கள அரசினதும், அரசியல்வாதிகளினதும் முகமூடிகளைக் கிழித்தெறிந்து, அவர்களுடைய உண்மையான முகங்களை உலகிற்குக் காட்டிய புண்ணியமாவது இவர்களுக்கு - இந்த உலக நாடுகளுக்குக் கிட்டும்.

இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பு அமுலில் இருக்கும் வரை - நியாயமான சமாதானத்தீர்வு ஒன்று தமிழ்மக்களுக்குக் கிடைக்கப்போவதில்லை, என்றே உறுதியாக நம்பப்படுகிறது.

அநீதியான ஒரு அரசியல்யாப்பை ஓர் ஆயுதமாக வைத்துக்கொண்டு, எந்த ஒரு நிவாரணத்தையோ, அல்லது தீர்வையோ தராது. சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கொண்டு போவதற்கு முயற்சிகள் ஒருபுறம் நடக்கின்றன.

மறுபுறம், விடுதலைப் புலிகளைச் சீண்டி, அவர்களை வலிந்து யுத்தத்திற்கு இழுப்பதற்கான சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இவையாவும் சமாதானத்திற்குச் சாதகமாக இல்லை என்பதையும், வருத்தத்துடன் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

மெல்பேர்னில் இருந்து சபேசன்

இத்தகைய காலகட்டத்தில், சமாதானப்பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக, விடுதலைப் புலிகள் எடுத்த முடிவு மிகச் சரியானதொன்றாகும்.

விடுதலைப் புலிகள் எடுத்த இந்த முடிவானது, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான முடிவு அல்ல! மாறாக, சமாதானப் பேச்சுவார்த்தைகள் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்ற தீர்க்கதரிசனத்தில் எடுத்த தெளிவான- முறையான முடிவு!

இந்தவேளையில் விடுதலைப் புலிகளுக்கு வாய்மொழி மூலம் பல உறுதிமொழிகளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பல உலக நாடுகளும் வழங்கி வருகின்றார்கள். இன்னும் பல வாய்மொழி வாக்குறுதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

தமிழினத்தின் கடந்த கால வரலாறு, இதற்குரிய பதிலை வைத்திருக்கின்றது. எழுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதையும், வாய்மொழி வாக்குறுதிகள் காற்றோடு கரைந்து போனதையும் தமிழினம் பல தடவைகள் கண்டுவிட்டது. உருப்படியான ஒப்பந்தங்கள், முறையாக அமுலாக்கப்படாவிட்டால், இந்த ஏமாற்றுவித்தைகள் தொடர்ந்தும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கும்.

எனவே, இடைக்கால நிர்வாகம் குறித்து, மிகத் தெளிவான திட்டத்தை, எழுத்துமூலம் உத்தியோகபூர்வமாக, அரசு தெரிவிக்காதபட்சத்தில், சமாதானப்பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளப்போவதில்லை.

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகளின் தலைமை மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளது. தமிழீழ மக்களின் நலன்கருதி, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எடுத்துள்ள இந்த முடிவுக்கு ஆதரவாக, தமிழீழ மக்கள் ஒருங்கிணைந்து நிற்கின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழீழ மக்களும் தங்களுடைய தார்மீகக் கடமையை, தங்களது ஒருங்கிணைப்பின் மூலம் செய்திட வேண்டும்!

# மீன்பிடி இறங்குதுறைகள் அமைப்பதற்கு அகழப்படும் முருகைக் கற்பாறைகள்!

## கடலரிப்பு அபாயம் ஏற்படுமென எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து - காரைநகர் வரையிலான கடற்பகுதியில் மீன்பிடிக்கலங்களின் தரிப்பிடத்திற்காக, மீன்பிடி இறங்குதுறைகளை அமைப்பதற்கு முருகைக் கற்பாறைகள் அகழ்வதால், கடலரிப்பு அபாயம் ஏற்படும் என்று - துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்கு, யாழ்.மாவட்ட கடற்தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

புயல் காலங்களில் - மீன்பிடிப் படகுகள் பாதுகாப்பாகத் தரித்து நிற்பதற்காக, கரையோரங்களில் மீன்பிடி இறங்குதுறைகளை அமைப்பது தொடர்பாக - துறைமுக அபிவிருத்தி அதிகார சபையும், கரையோரப் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து செயற்படுவதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கடற்கரையோரங்களிலுள்ள - மண்ணையும், முருகைக் கற்பாறைகளையும் அகழ்ந்தெடுத்து, மீன்பிடி இறங்குதுறை அமைத்தால் - கடல்நீர் தரைப்பகுதிக்குள் புகுந்து கடலரிப்பினை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதால், அத்திட்டத்தை கைவிடும்படியும் இதற்குப் பதிலாக வேறொரு பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்து, மீனவர் இறங்குதுறையை அமைக்க நடவடிக்கை எடுக்கும்படியும், யாழ்.மாவட்ட நீரியல்வள கடற்தொழில் திணைக்களம், துறைமுக அதிகார சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ரா,அ)

# அல் - கொய்டா முக்கிய நபரொருவர் ஆப்கானிஸ்தான் எல்லையில் கைது!


சமீபத்தில் கைதான அல்-கொய்டா சந்தேகநபர்

அல்- கொய்டா அமைப்பின் மிக முக்கியமான நபரொருவர், ஆப்கானிஸ்தான் எல்லையருகே வைத்துப் பிடிக்கப்பட்டதாக - பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அல்ஜீரியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பாகிஸ்தானில் பேஷாவரில் வசித்தவருமான அடில் அல்-ஜசீரி என்பவரே கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

இவரிடமிருந்து, பாகிஸ்தானில் இயங்கிவரும் ஏனைய அல் - கொய்டா அமைப்பினர் பற்றிய தகவல்களைத் திரட்ட முடியுமென, பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் பைசால் சாலே கூறினார்.

கடந்த மாதமும், அல் - கொய்டாவின் தொடர்பாடல் பிரிவின் முக்கிய நபரொருவர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் - பொலிஸாருடனும் இராணுவத்தினருடனும் இணைந்து, அமெரிக்காவின் சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினரும் (எவ்.பி.ஐ), அல்கொய்டா அமைப்பினருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதேவேளை - பாகிஸ்தானின் அல் - கொய்டாவுக்கு எதிரான நடவடிக்கைகள், அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் மகிழ்ச்சியைத் தந்திருப்பதாகவும் -

இதனடிப்படையிலேயே பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாராப்பின் மேற்கு நாடுகளுக்கான விஜயமும் இந்தமாத இறுதியில் நடக்கவிருப்பதாகவும் - அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## சர்வதேச அமைதிப்படைக்கு லைபீரியா கோருகின்றது!



லைபீரியாவில் அமைதிக்காப்புப் பணிக்காக, சர்வதேச நாடுகளைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட வேண்டுமென- அந்நாட்டின் தகவல் தொடர்பு அமைச்சர் ரெஜினோல்ட் குட்ரிட்ச் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கானாவில் வைத்து - லைபீரிய அரசபடைகளுக்கும், பேராளிகளுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் - லைபீரிய அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை - அரச படைகள் சில இடங்களில் போர்நிறுத்தத்தை மீறியதாக, போராளிகள் குற்றஞ்சாட்டியிருப்பதையும் அமைச்சர் குட்ரிட்ச் மறுத்துள்ளார்.

கானாவில் நடந்த பேச்சுக்கள் வழியாக - தற்போதைய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லரை ஒதுக்கிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது பற்றியும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை - லைபீரியாவில் சர்வதேச அமைதிப்படை ஒன்று சேவையில் ஈடுபடவேண்டிய தேவை வரின், அதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என - அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பொதுவான யாப்பு, அரசியல் தஞ்சம் கோருவோர் விவகாரம்**

# ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் கிரீஸில் கூடி ஆராய்கின்றனர்!

(லண்டன்)

ஐரோப்பிய யூனியனின் அரசியல் யாப்புப் பற்றியும், அரசியல் தஞ்சம் கோருவோரை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும் - ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் - கிரீஸ் நாட்டில் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

கிரீஸ் நாட்டின் கடற்கரைப் பகுதியான தெஸாவோனிங்கில் நடைபெற்றுவரும் இச்சந்திப்புக்காக மிகக்கடுமையாக, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 15000 பொலிஸாரும், படையினரும் கரையோரப்பகுதி முழுவதும் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதோடு, கடற்படைக் கப்பல்களும் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய யூனியனின் தலைமை நாடாக இருந்துவரும் கிரீஸிடமிருந்து - இத்தாலிக்கு தலைமைப் பதவி செல்வதற்கு முன் இச்சந்திப்பு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - பேரழிவு ஆயுதங்கள் அழிப்பு, அமெரிக்காவுடன் ஐரோப்பிய யூனியனின் உறவு, பல்கன் நாடுகள் விவகாரம் ஆகியவை தொடர்பாகவும் ஐரோப்பிய யூனியன் சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

**ஈராக் விவகாரத்தில் தவறாக வழிநடத்தினார்**

# அமெரிக்க ஜனாதிபதி புஷ் மீது செனட்டர் கெரி பகிரங்க சாடல்!



ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்ததாகக் கூறி, போரைத் தொடங்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதராக - அமெரிக்க நிர்வாகத்திலிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

ஜோர்ஜ் புஷ் - ஈராக் மீதான போரைத் தொடங்குவதற்கான காரணத்தை, உண்மையை விட உருப்பெருக்கிவிட்டதாக - ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ஜோன் கெரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜோர்ஜ் புஷ் - அனைவரையும் தவறாக வழிநடத்திவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜோன் கெரி - அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் - ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடக்கூடிய முன்னணி நிலையிலிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.


செனட்டர் கெரி

ஜோர்ஜ் புஷ் - ஈராக் விவகாரத்தில் பொய் சொல்லியிருந்தால், அவரை நான் சும்மாவிடப்போவதில்லை எனவும், ஜோன் கெரி எச்சரித்துள்ளார்.

அதேவேளை - பென்ரகன் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரியான டக்ளஸ் வெய்த் - ஈராக்கில் இன்னமும் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க - ஈராக்கில் கைதான சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களின் துணையுடன், மறைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் பற்றிய விபரங்களைப் பெறும் திட்டமொன்றை ஆரம்பிக்கப்போவதாக - அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் மீதான எதிர்ப்புப் போலவே, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் - ஈராக் விவகாரத்தில் தவறாக வழிநடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அங்கோலா விமானநிலையத்திலிருந்து**

# திருடப்பட்ட விமானத்தால் அமெரிக்கா கடும் அச்சம்!



அங்கோலா விமானநிலையத்திலிருந்து திருடிச்செல்லப்பட்ட போயிங் ஜெட் விமானமொன்றை, ஆபிரிக்காவில் இயங்கும் போராளிக் குழுக்கள் எவையாவது கடத்திச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

கடந்த மாதம் அங்கோலா விமான நிலையத்திலிருந்து, திடீரெனத் திருடிச்செல்லப்பட்ட இந்த விமானத்தின் பைலட்டுடன், விமானநிலைய அதிகாரிகள் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் - அது சாத்தியமாகவில்லை.

இந்த விமானத்தைத் திருடிச் சென்றவர்கள் - அதனை 'செப்ரெம்பர் 11' போன்ற தாக்குதலுக்குப் பயன்படுத்த முனையலாம் என அமெரிக்கா அச்சம் கொண்டுள்ளது.

இந்த விமானத்தைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்காவின் உளவுச் செய்மதிகள் ஆபிரிக்கா முழுவதையும் சல்லடை போட்டும், இதுவரை விமானத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விமானம் - அமெரிக்கன் ஏயர்லைன்சைச் சேர்ந்தபோதும் - இது குத்தகைக்காகப் பலபேரின் கைமாறிச் சென்று - இறுதியாக, மியாமியைச் சேர்ந்த 'ஏரோஸ்பேஸ் சேல்ஸ் அன்ட் லீசிங்' நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

## படமும் செய்தியும்

**பக்தாத்தில் நேற்றும் அமெரிக்கர் ஒருவர் பலி!**



பக்தாத்திற்கு வெளியே - நேற்று, ஆர்.பி.ஜி தாக்குதலுக்கு இலக்கான அமெரிக்க வாகனமொன்றைப் படத்தில் காணலாம். இதில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

**இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்; இருவர் மரணம்!**



வட இஸ்ரேலில் - நேற்றுப் பலஸ்தீனத் தற்கொலைப் படையாளி ஒருவர் நடத்திய தாக்குதலில் - அவரும், கடைக்காரரர் ஒருவரும் பலியாகினர். இங்கு குறிப்பிட்ட தாக்குதல் நடைபெற்ற கடையில் - மனித உடலங்களைத் தேடுகின்றார் மீட்புப் பணியாளர் ஒருவர்.

**சுடப்பட்ட ஈராக்கியரின் மரண ஊர்வலம்**



பக்தாத்தில் நேற்று முன்தினம் அமெரிக்கர்களால் - ஆர்ப்பாட்டம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலியான ஈராக்கியர் ஒருவரின் சடலம், இறுதிக் கிரியைகளுக்காக கொண்டு செல்லப்படுகிறது.

# யூதர்களின் குடியேற்றத்தை அகற்ற ஆரம்பித்தது இஸ்ரேல்!



புதிய சமாதானத் திட்டத்திற்கு அமைவாக - யூதர்கள் குடியேற்றமொன்றை அகற்றும் பணியை இஸ்ரேல் நேற்று ஆரம்பித்தது.

மலைப்பகுதியான மிட்ஸ்ஸெப் யிட்ஸர் பகுதியில் இந்தக் குடியேற்றம் அமைந்திருந்தது. இந்தக் குடியேற்றம் - பலஸ்தீன நகரான நபுலசுக்கு அருகில் இருக்கிறது.

நேற்று இஸ்ரேலியப் படையினர், குடியேற்றத்தை அகற்றும் பணியை ஆரம்பித்தபோது - அங்கு கூடிய நூற்றுக்கணக்கான யூத இளைஞர்கள், இம்முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

குடியேற்றத்தை அகற்றும் பணிக்கு வாகனங்கள் வரும் பாதையெல்லாம் தடைகளைப் போட்டும், ரயர்களைப் எரித்தும் அவர்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

"இது எங்கள் மண், இன்றில்லாவிட்டால் நாளை மீண்டும் நாம் இங்கு வருவோம்" என அவர்கள் கோஷம் எழுப்பினர்.

காஸா மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளிலுள்ள யூதக் குடியேற்றங்களை அகற்றுவதாக - புதிய சமாதானத் திட்டப்படி, இஸ்ரேல் உறுதியளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈ.பி.டி.பி முக்கியஸ்தர் வீட்டில் கொடுமைப்படுத்தப்பட்ட சிறுவன்!

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மீட்டது

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது வீட்டில் வைத்து, கொடுமையான முறையில் வேலை வாங்கப்பட்ட பன்னிரெண்டு வயதுச் சிறுவனொருவனை- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மீட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பேச்சாளர் மியூரு விஜயரட்ன தெரிவித்திருப்பதாவது -

தலவத்துகொட பகுதியிலுள்ள, ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது வீட்டில், குறிப்பிட்ட சிறுவன் வீட்டுப்பணி செய்து வந்தான்.

குறிப்பிட்ட அரசியல்வாதியின் மனைவியின் கொடுமை தாளாமல், இச்சிறுவன் அங்கிருந்து தப்பி, சில்லறைக் கடையொன்றில் வேலைக்கு நின்றபோது, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மீட்கப்பட்டான்.

தான், குறிப்பிட்ட அரசியல்வாதியின் மனைவியால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதாகவும், நாளுக்கு ஒரு தடவை மட்டுமே உணவு தரப்பட்டதாகவும் அச்சிறுவன் கூறினான்.

மட்டக்களப்பிலுள்ள - குறித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டிலிருந்து கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இச்சிறுவன்- மட்டக்களப்பிலிருந்தபோது பாடசாலைக்குச் சென்று வந்ததாகவும், கொழும்பு வந்ததும், பாடசாலைக்கு அனுப்பப்படாது வீட்டு வேலைகள் செய்யும்படி பலவந்தப்படுத்தப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தற்போது - சிறுவனை அடித்துத் துன்புறுத்தி குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக - தொழில் அமைசசின் உதவியுடன் வழக்குத் தாக்கல் செய்ய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது- இவ்வாறு, அச்சபையின் பேச்சாளர் மியூரு விஜயரட்ன மேலும் தெரிவித்திருக்கிறார்.

# அமெரிக்க பசுபிக் படைத் தலைமையுடன் கடற்படைத் தளபதி சந்தித்துப் பேச்சு!

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவும் - அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை இவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தில் - அமெரிக்காவில், இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாகப் பணியாற்றும் பிரிகேடியர் றொகான் ஜெயசிங்க, கடற்படைக் கப்டன் கிரந்த உடவத்த ஆகியோரும் இலங்கைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் - அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளை அதிகாரி அட்மிரல் தோமஸ் டீ பார்கோ, அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிரிவுத் தளபதி ஜெனரல் வில்லியம் பேஜர், மேஜர் ஜெனரல் கிளைக் கெல்டன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது, அமெரிக்கா - இலங்கைப் படையினருக்கு வழங்கி வரும் 'பலன்ஸ் ஸ்ரைல்' பயிற்சி நடவடிக்கையைத் தொடர்வதென்று உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், அமெரிக்கக் கடற்படை- இலங்கைக் கடற்படைக்கு தன்னாலியன்ற சகல உதவிகளையும் வழங்கும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் உறுதியளித்தனர்.

பாதுகாப்புக் கற்கைகளுக்கான ஆசிய பசுபிக் நிலையத்தில் வருடாந்தம் - இலங்கையின் இருபது இராணுவ, கடற்படை அதிகாரிகளுக்கு - அமெரிக்கா பயிற்சிளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

### மறியற் போராட்டம்

சுழிபுரம் மத்தி கிராம உத்தியோகத்தர் ந.குமரகுருபரன் காணாமற்போன சம்பவத்தை ஆட்சேபித்தும் அவரை மீட்கக் கோரியும் - நேற்று, அடையாள மறியல் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

சங்கானை பிரதேச செயலக முன்றலில் நடைபெற்ற இம்மறியல் போராட்டத்தில் - சங்கானை பிரதேச செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(லி)

# நாடாளுமன்றில் சவப்பெட்டி; ஒப்பாரியிட்ட உறுப்பினர்கள்!

## சபையை ஒத்திவைத்தார் சபாநாயகர்

நாடாளுமன்றத்தினுள்ளே எதிர்க்கட்சிகள் நேற்று- சிறிய சவப்பெட்டி ஒன்றை எடுத்துவந்ததை, அரசாங்கம் கண்டித்துள்ளது.

இந்தச் செயல் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் நடவடிக்கை என, ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் எடுத்துவந்த சவப்பெட்டியினுள்ளே என்ன இருந்தது என்பது தெரியவில்லை என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்டவர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென - சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

நாடாளுமன்ற நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியபோது - ஏற்பட்ட அமளிதுமளியினால், சபாநாயகர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து விட்டு, உறுப்பினர்களை வெளியேறுமாறும் பணித்துள்ளார்.

அப்போது, நாடாளுமன்றிலிருந்த எதிர்க்கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் கறுப்பு உடையணிந்திருந்தனர்.

சபையை ஒத்திவைத்துவிட்டு சபாநாயகர் வெளியேற முற்பட்டபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிறிய அளவிலான சவப்பெட்டி ஒன்றைத் தலைமேல் சுமந்தபடி, ஒப்பாரி வைத்தவாறு, சபை மத்திக்கு வந்தார்கள். இதனால் நாடாளுமன்றில் பெரும் பதற்றம் நிலவியது.

(01,200)

# நிலையான தீர்வுக்கு நகர்வதற்கு இடைக்கால நிர்வாகம் அவசியம்!

## பிரதமரிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

வட-கிழக்கில் உறுதியான அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாக சபையொன்று உருவாக்கப்படுவது அவசியம் என்றும், இதன் மூலமாகவே நிலையான சமாதானத்தை நோக்கி நகர முடியும் எனவும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

நேற்று முன்தினம்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமருடன் நடாத்திய பேச்சுக்களின்போதே, மேற்படி விடயத்தை எடுத்துக் கூறினர்.

இச்சந்திப்பின்போது, கூட்டமைப்பு சார்பில்- ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார், சிவாஜிலிங்கம், விநாயகமூர்த்தி, ரவிராஜ், மாவை சேனாதிராஜா, இராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், சந்திரநேரு, கே.துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிகாரங்கொண்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதன் அவசியம் குறித்து, இச்சந்திப்பில் பிரதமர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டதாக - நமது ஈழநாட்டிடம் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

# தற்கொலைப் படையை கலைத்தால் ஊடுருவும் அணிக்குத் தேவையிராது

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது தற்கொலைப் படையைக் கலைக்கவேண்டும். இவ்வாறு செய்தால், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இயக்கப்படும் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியை வைத்திருக்க வேண்டிய தேவையும் இருக்காது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

ஜனாதிபதியின் இக்கருத்தை வெளியிட்ட, அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ், விடுதலைப்புலிகள் தமது தற்கொலைப் படையைக் கலைக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி தீவிரமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## கடற் கண்காணி...

மித்ர' கப்பலில் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் மாலுமிகளை விசாரிக்கும் பணிகளில் கண்காணிப்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான இறுதியான அறிக்கை அடுத்தவாரமே வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூர்...

நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு உடனடியாக தகவல் கொடுககப்பட்டதைத் தொடர்ந்து -

கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

நேற்றிரவுவரை, இக்கைக்குண்டு அகற்றப்படாததால் - வைமன் வீதியின் இரு முனைகளிலும் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இன்று காலையே - இக்கைக்குண்டு வெடிக்கவைக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## பிரதமர் ரணிலின் பேச்சில்...

மட்டுமே நாம் பேச்சைத் தொடர்வது பற்றி கவனிக்கலாம்.

தற்போதுள்ள பிரச்சினைகளிலிருந்து முன்னேறுவது மற்றும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் பொறுப்பு, விடுதலைப் புலிகளிடமே இருக்கிறது என பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது பற்றித் தெரிவித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் -

வரையறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசியலமைப்பும், ஜனாதிபதிக்கும் ரணிலின் நிர்வாகத்துக்குமான பூசலும்- இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதனையும் வழங்குவதற்கும் எதிராகவே உள்ளன. பதிலாக, அரசாங்கம் - இடைக்கால நிர்வாகம் பற்றிய நடைமுறைச்சாத்தியமான கட்டமைப்பு அல்லது பொறிமுறையொன்றை முன்வைக்குமாறு புலிகளைக் கோரலாம்.

ஆனால் - அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு வழங்கக்கூடிய அரசியல் - நிர்வாக அதிகாரங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் எதுவும் தெரியாது - அவ்வாறான கட்டமைப்பு அல்லது பொறிமுறையை விடுதலைப் புலிகள் பிரேரிப்பது புத்திசாலித்தனமானதல்ல. இதனால்தான் - நாம் அரசாங்கத்தையே யோசனைகள் முன்வைக்குமாறு கோருகிறோம் என்று பதிலளித்தார்.

ரோக்கியோ பிரகடனங்களின் படியான வழிமுறைகள்- பக்கச்சார்பானவை, ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவை என்பதால் - அதனை விடுதலைப் புலிகள் நிராகரிப்பதாகத் தெரிவித்த அன்ரன் பாலசிங்கம்-

அது எதிர்காலப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையாது என்றார்.

நாங்கள் சமாதான முயற்சிகளில் முற்றாக அடிப்படை மாறுதல்களை வலியுறுத்துகிறோம். புதிய, மறுசீரமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் எமக்கு வேண்டும். இதுபற்றி நாம் நோர்வே அனுசரணையாளர்களுடன் பேசுவோம் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

## இடைக்கால நிர்வாகம்...

படையிலேயே ரோக்கியோ மாநாடு நடைபெற்றது. அங்கு கிடைக்கப்பட்ட நிதியில் வடக்கு- கிழக்கு மாகாணமும் அபிவிருத்தி செய்யப்படும். அந்த மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை, வேறு எந்த தேவைக்கும் அரசாங்கம் பயன்படுத்தாது.

இடைக்கால நிர்வாக சபையை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும். அவர்கள் அந்தக் கடமையிலிருந்து தவறிவிட முடியாது.

விடுதலைப் புலிகளுடன் பேசாமல சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. மீண்டும் ஒரு யுத்தம் நடைபெறாது. அவ்வாறு யுத்தம் ஏற்படுமானால், மக்களால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியாது. எதிர்காலத்தில் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பு உள்ளது. அதற்கு நிரந்தர சமாதானம் தேவை. விடுதலைப் புலிகளுடன் இணைந்துதான் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். வடக்கு-கிழக்கில் அவர்கள் பிரதான சக்தியாக விளங்குகின்றார்கள். அரசியற்தீர்வுகூட விடுதலைப் புலிகளின் சம்மதத்துடன்தான் ஏற்படுத்தமுடியும்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக, எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் குறித்து நாங்கள் அலட்டிக்கொள்வதில்லை. பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால், ஐ. தே. மு. வெற்றி பெறும் . ஆனால், அவ்வாறான தேர்தல் ஒன்று அவசியமில்லை. இருந்தாலும், பொ.ஐ.மு ஆட்சியைக் கைப்பற்றப்போவதாக தெரிவிக்கின்றது. அது மிகவும் வேடிக்கையானது. எந்த சக்திகளாலும் ஐ.தே.மு. அரசாங்கத்தை மாற்றியமைத்துவிட முடியாது என்றும் சொன்னார்.

## பொங்கு தமிழ் எழுச்சி...

தமிழ்' எழுச்சி நிகழ்விற்கான பிரசாரத்திற்காக யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று தீவகத்திற்குச் சென்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள், நேற்றுக்காலை- வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று, அங்குள்ள மக்களுடன் பொங்கு தமிழ் தொடர்பாகக் கலந்துரையாடல்களை நடத்தினர்.

இதன்போது அங்குள்ள மக்கள், தமக்குக் கடற்படையினரால் இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஆகியவை பற்றித் தம்மைச் சந்தித்த மாணவர்களிடம் மனந்திறந்து தெரிவித்தனர்.

அத்துடன் - தென்மராட்சி பிரதேசத்திலும் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று பொங்கு தமிழ் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை - தென்மராட்சியில் இராணுவத்தினரால் பொங்கு தமிழுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் வீதிகளில் ஒட்டப்பட்டு வருவதுடன், பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டாம் என இராணுவத்தினரால் மாணவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

(லி)

## தமிழ்ச் சிறுவன்...

கருதப்படுவதால், இவனை லிட்டில் ரைகர் என்றே ஊடகங்கள் அழைக்கின்றன.

கஜனே - கனடா நாட்டின் சார்பாக, உலக அளவிலான போட்டிகளில் விளையாடும் மிகச் சிறிய வயதானவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்
புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா?, குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P-077 6080660 (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(சி-1088)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.